1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

Tele {grams: "CATHOLIC PRESS" JAFFNA
{phone: No. 100.

# சத்தியவேத பாதுகாவலன்

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

79-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1954-ம் ஆண்டு தை மாதம் 21-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 3-ம் இலக்கம்

## சுதேச வர்த்தமானம்

### காலநிலை

பனிகடுமையாகப் பெய்கின்றது. அதற்கேற்ற கினிகள் ஊரிலே தலைகாட்டத் தொடங்குகின்றன. இடையிடையே மழைக்கோலம் காணப்படுகின்றது.

### யாழ்ப்பாணத் தேர்தல்மனு

விடுமுறைகாரணமாகத் தவணையிடப்பட்டிருந்த யாழ்ப்பாணத் தேர்தல்மனு விசாரணை மறுபடியும் சென்றசெவ்வாய்க்கிழமை நீதியரசர் வீரசூரிய அவர்களால் தொடக்கி நடத்தப்படுகிறது. அன்று குடிசைக்கைத்தொழில்களின் உபதலைவரான திரு. சி. டி. விஜயதெய்வேந்திரம் தொடர்ந்து விசாரணைசெய்யப்பட்டனர்.

### பிரதிநிதியின் பாராட்டுரை

புத்தளப்பட்டினத்திலுள்ள சென் அண்ட்றூஸ்கல்லூரியின் புதியகட்டடம் சென்றதிங்களன்று சிலாபமேற்றிராணியாராகிய மகாவந். எட்மண்ட் பீரிஸ் ஆண்டவரால் திறந்துவைக்கப்படலாயிற்று, அவ்வேளை பாராளுமன்றப் புத்தளப்பிரதிநிதியான ஜனப் எச். எஸ். இஸ்மாயில்அவர்கள் பேசிய போது: "இன்றுநாங்கள் சுகித்து அனுபவிக்கின்ற சுதந்திரமானது கிறீஸ்தவமிஷனரிமார்களின் முயற்சிகளாலேயே வெகுவாகக்கிட்டலாயிற்று; ஏனெனில், சுதந்திரலங்காவின் முன்னோடிகள் ஏறக்குறையஎல்லோருமே கிறீஸ்தவபாடசாலைகளில் கல்விபயின்றூர்கள்" எனக் கூறலாயினர். அத்தருணம் மேற்றிராணியாண்டவர் புதிய கல்லூரியிலே காலஞ்சென்ற சேனதிராசா அவர்களின் அழகியபிரதிமைப் படம் ஒன்றையும் ஸ்தாபித்தனர். ஏனெனில், அவரின்ஞாபகார்த்தமாகவே அவ நடையபுத்திரிகளால் தற்போது கல்லூரிக்கட்டடம் அமைந்துள்ளகாணி வழங்கப்படலாயிற்று.

### இந்திய—இலங்கைப் பிரச்சினை

புதுடில்லியிலே சென்ற 16-ம்,17-ம், 18-ந் திகதிகளில் பண்டிதநேரு, சேர் ஜோண் கொத்தலாவல இருவருக்குமிடையில் நடைபெற்ற விவாதங்களின் விளைவாக இந்திய—இலங்கைப் பிரச்சினைசம்பந்தமாக ஓர்உடன்படிக்கை நிறைவேறியிருக்கிறது. இந்த உடன்படிக்கைக்கு அவர்கள் இருவரும் சென்ற 18-ந்திகதி பிற்பகல் 2-45 மணிக்குக் கைச்சாத்திட்டனர். இதன் முக்கிய அம்சம் ஒவ்வொன்றிலும் இலங்கையின் விருப்பங்கள் பெரும்பாலும் பூர்த்திசெய்யப் பட்டிருக்கின்றன. இலங்கையின் கோரிக்கை பெருமளவில் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. சேர் ஜோண் கொத்தலாவலஅவர்கள் இந்திய-இலங்கைப் புதியஉடன்படிக்கை பற்றி நாளைத்தினம்கூடும் மந்திரிசபைக்கூட்டத்தில் ஓர்அறிக்கை வெளியிடுவார்.

### ஆனையிறவுத் தொழிற்சாலை

ஆனையிறவில் அமைக்கப்படவிருக்கும் டி. டி. ரி.—காஸ்ரிக்சோடா—தளோறின் தொழிற்சாலைக்கென்று 66 லட்சம்ரூபா பெறுமதியான யந்திரசாதனங்கள் வந்து சேர்ந்துவிட்டனவென்றும், ஆனையிறவிலிருந்து தொழிற்சாலைக்கு றெயிற்பாதை அமைக்கப்பட்டுவிட்டதென்றும், காரியாலய கட்டிடவேலை வருகிற பங்குனிமாதத்திலே பூர்த்தியாகிவிடுமென்றும் அறிக்கையிடப்பட்டிருக்கிறது. ஆயின் வருகிற 1955-ம் ஆண்டில்தான் தொழிற்சாலையில் வேலைஆரம்பமாகும். அப்போது அதிலே நாளொன்றுக்கு ஐந்துதொன் காஸ்ரிக்சோடாவும், ஒருதொன்குளோறினும், இரண்டுதொன் டி. டி. ரி.யும், ஐம்பதினாயிரம் கனஅடி சலவாயுவும் உற்பத்திசெய்யப்படும். இந்தத் தொழிற்சாலையை ஒழுங்குபடுத்தும் அதிகாரியாக நியமனஞ்செய்யப்பெற்ற திரு. எம. எவ். விப்வோர்த் அவர்கள் சென்றஞாயிற்றுக்கிழமை "ஸறுத் ஹெயேர்ட்"எனும்கப்பலில் கொழும்பு வந்துசேர்ந்திருக்கின்றூர்.

### பாடசாலைகளிற் சேரலாம்

எட்டாம்வகுப்புத் தகுதிப்பரீட்சையில் தவறிய பதினாறுவயதுக்கு மேற்பட்டமாணவர்கள் சலார்கட்டிப் படிக்க விரும்பினால் பாடசாலைகளில் — அரசினர்பாடசாலைகளில்தானும் — சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். உதவிப்பணம்பெறும் பாடசாலைகளிலே இந்த மாணவர்களைச் சேர்ப்பதற்கான ஒழுங்கு ஏற்கனவே செய்யப்பட்டுள்ளது. தற்போது அரசாங்கம் அரசினர்பாடசாலைகளிலும் இவர்களைச் சேர்க்கத் தீர்மானித்திருக்கிறது. இதற்குக்காரணம், இவர்கள்எல்லோருக்கும் ஏதும் தொழிற்பயிற்சிகள் அளிக்க வசதிகள் இல்லாமையேயாகும். அரசினர்பாடசாலைகளில் திருமபப்போய்ப் படிக்க விரும்புகிறவர்கள் கல்விப்பகுதிக்கே மனுப்பண்ணிக் கொள்ளவேண்டும்.

### கணிதமும் விஞ்ஞானமும்

இவ்வருடமுதல் 400 அரசினர் ஆங்கிலபாடசாலைகளில் கணிதமும், பொதுவிஞ்ஞானமும் ஏழாம்வகுப்பிலே சுவபாஷையில் கற்பிக்கப்படும். இவற்றுள் 300 கனிஷ்ட பாடசாலைகளும், 50 சிரேஷ்டபாடசாலைகளும், 50 மத்திய பாடசாலைகளும் அடங்கும். ஏழாம் வகுப்பிலே கணிதம், விஞ்ஞானம் ஆகியபாடங்களைச் சுவபாஷையில் கற்பிக்க ஏதாவதுகஷ்டம் இருக்குமானால் அதைத்தெரிவிக்குமாறு அப்பாடசாலைகளின் அதிபர்களைக் கல்விப்பகுதி கேட்டுக்கொண்டதன்பேரில் மூன்று பாடசாலைகள் மாத்திரமே கஷ்டமிருப்பதாகத் தெரிவித்தன. இவற்றிலும் அப்பாடங்கள் சுவபாஷையில் கற்பிக்கப்படுமாறே கல்விப்பகுதி நடவடிக்கை எடுத்துவருகிறது.

### பிரபல கிறிக்கெற்விளையாட்டு

இந்தியபிரதமர் ஜவஹர்லால் நேரு அவர்களைத் தலைமையாகக் கொண்ட இந்தியபாராளுமன்ற அங்கத்தவர்கள் கோஷ்டிஒன்றுக்கும், இலங்கைப்பிரதமர் சேர்ஜோண் கொத்தலாவலஅவர்களைத் தலைமையாகக்கொண்ட இலங்கைப்பாராளுமன்ற அங்கத்தவர்கள் கோஷ்டிஒன்றுக்குமிடையே வருகிற மாசிமாதம் 3-ந் திகதி புதன்கிழமை ஓர் கிறிக்கெற் விளையாட்டுநடைபெறவிருந்தது. சனப்பிரதிநிதிகள் சபையின் முதல்வரான திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனஅவர்கள் இந்தவிளையாட்டுக்கான ஒழுங்குகளைச் செய்துவந்தார். ஆனால், திருவாங்கூர்-கொச்சிப் பொதுத்தேர்தலையிட்டும், மற்றும் அதிகமான வேலையிருப்பதையிட்டும் பண்டிதநேருஅவர்கள் அடுத்தமாதம் 3-ந் திகதி இலங்கைக்கு வந்துகொள்ளமுடியாதநிலைமையில் இருக்கின்றூர். அதனால் இந்தக் கிறிக்கெற்விளையாட்டை வருகிற சித்திரை, அல்லது வைகாசி மாதத்தில் நடத்தத் தீர்மானமாயிருக்கிறது. அப்போது ஆசியபிரதமர்களின்மகாநாடு இங்கு நடைபெறவிருப்பதால் இந்தியபிரதமர் நேருஅவர்களும் இங்குவருவார்.

### கம்யூனிஸ்தபத்திரிகை ஆசிரியர்

இலங்கையிலே கம்யூனிஸ்தகட்சி வெளியிட்டுவரும் "தேசாபிமானி" எனும் வாரப்பத்திரிகையின் ஆசிரியரான திரு. கே. இராமநாதன் எனபவர் சென்றமாதம் மதுரையில் நடந்தேறிய அகில-இந்திய கம்யூனிஸ்தகட்சியின் மகாநாட்டிற்குச் சமூகமளிப்பதற்காக டக்றர் எஸ். ஏ. விக்கிரமசிங்க, திரு. பீற்றர் கெனமன்எனும் இலங்கைக் கம்யூனிஸ்தலைவர்களுடன் இந்தியா சென்றிருந்தார் ஓர்இந்தியரான இவரை மதுரையிலிருந்து இலங்கைக்குத் திருமபிவர அனுமதிக்கப்படாதென்று பிரதமர் சேர் ஜோண் கொத்தலாவல உத்தரவுபிறப்பித்து, ஓர் "தடைவிதிக்கப்பட்ட குடியேற்றகாரர்" ராக இவரை அறிக்கையிடும்படி குடியேற்ற அதிகாரிகளுக்குத் தெரிவித்திருக்கின்றூர். பிரதமரே இத்தடையை விதித்தமையால் அவர்மீது வழக்குத்தொடரலாமா என்பதுபற்றிக் கம்யூனிஸ்தகட்சியின் காரியதரிசியான பீற்றர்கெனமன்என்பவர் வழக்கறிஞர்களுடன்கலந்து ஆலோசனைசெய்து வருகிறூரெனத் தெரியவருகிறது.

### தேசீயகட்சியில் சேர்ந்தாராம்

மன்னார்த்தொகுதியின் பாராளுமன்றப்பிரதிநிதியான திரு. சி. சிற்றம்பலம் அரசாங்ககட்சியான ஐக்கியதேசியகட்சியில் சேர்ந்துவிட்டாரெனத் தெரியவருகிறது. மன்னார்ப்பகுதி ஐக்கியதேசிய கிளைக்கட்சியின் கேள்விக்கிசைந்தே அவர் இவ்வாறு செய்தாரென்று சொல்லப்படுகிறது.

### பெண்களும் மதுபானமும்

கள்ளு, சாராயத்தவறணைகளுக்கு மதுபானம்அருந்தச் செல்லும்பெண்கள் இனிமேல் மதுபரிபாலன அதிகாரிகளால் கைதுசெய்து வழக்குத் தொடரப்படுவார்கள். இன்னும் கள்ளு, சாராயம் பெண்களுக்கு விற்கும் தவறணைகாரர்மீதும் நடவடிக்கை எடுக்கப்படும். பெண்கள் மதுபானம் அருந்தத் தவறணைக்குச் செல்வதும், அவர்களுக்கு மதுபானம் விற்பதும் மதுபரிபாலன சட்டத்துக்கு விரோதமான செயலாகும். அதிலே இவை சம்பந்தமான விதிகள் இருக்கின்றன. ஆனால், இவ்விதிகள் இதுவரை கடுமையாகக் கையாளப்படவில்லை. தற்போது அருந்ததியார்சங்கம் உள்நாட்டு மந்திரியாருக்குச் செய்துகொண்ட முறையீட்டின்பேரிலேயே கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

### நயினாதீவுப் புத்தகோவில்

நயினாதீவிலே 75 அடி உயரமான புத்தகோவிலொன்று புதிதாகக் கட்டப்பட்டுவருகிறது. சிங்களத்திலே "நாகதீபா" என்று அழைக்கப்படுகின்ற இப்புதியகோவில் இவ்வருடத்திலே பூர்த்தியடையுமெனச் சொல்லப்படுகிறது.

### முடிக்குரிய காணிப்பங்கீடு

குஞ்சுப்பரந்தனிலும், அதற்குஅருகாமையிலுள்ள பகுதிகளிலும் முடிக்குரியகாணிகளைப் பங்கீடாகப்பெற்றுக் கொள்ள விரும்புகிறவர்கள் தமக்கு மனுப்பண்ணவேண்டுமென்று வடமாகாணஏசன்றர் நடுத்தரவகுப்பினரைக் கேட்டிருக்கின்றூர். பொதுவிலே வருடம்ஒன்றுக்குச் சராசரியாகப் 12,000 ரூபாவுக்குமேல் வருமானமுள்ளவர்கள் இந்தக்காணிப்பங்கீட்டுக்கு உரிமை பாராட்ட முடியாதென்றும், மனுப்பண்ணுகிற ஒவ்வொருவருக்கும் பத்து ஏக்கர்காணி வழங்கப்படுமென்றும் தெரியவருகிறது. ஆனால், காணிக்கு மனுப்பண்ணுகிற ஒவ்வொருவரும் தனக்குக்கொடுக்கப்படும் காணியைத் திருத்திக் கமச்செய்கை நடத்தும்விஷயமாய்த் தான்எவ்வளவுபணம் செலவிடத்தயாரென்றும், கமத்தொழிலில் தனக்குள்ள அறிவு, அனுபவம் எவ்வளவென்றும் மனுவிலேகாண்பிக்க வேண்டும்.

### விதைவெங்காய இறக்குமதி

இலங்கையிலுள்ள கமக்காரர் தங்களுக்குத் தேவைப்படும் விதைவெங்காயத்தை வைத்துக்கொண்டு நாடு முழுமைக்கும் வேண்டிய வெங்காயத்தை உற்பத்திசெய்வார்களானால் வெளிநாட்டிலிருந்து விதைவெங்காய இறக்குமதிக்குத் தடைவிதிக்கலாமென உணவு—கமத்தொழில் மந்திரியாரின் நிரந்தரக் காரியதரிசியான திரு. கே. அழ்வாப்பிள்ளை அபிப்பிராயந்தெரிவித்திருக்கின்றூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவன் என்னை அழைக்கிருர்!

காலம் — 1952-ம் ஆண்டு வைகாசி மாதம் 23-ந் திகதி சாயந்தரவேளை.

"தேவன்என்னை அழைத்தால்?" என்று ஜோண்பிடிவாதமாகக் கூறிஞன்.

அவனுடையதாய் தான் வாசித்துக் கொண்டிருந்த புத்தகத்தை மூடிவிட்டுத் தன்செல்வமகனின் முகத்தைஉற்று நோக்கினுள். ஜோண் குடும்பத்தின் கடைக்குட்டியா யிருந்தபடியால் அவன் பெற்ருேர் அவனுக்கு அளவுக்குமிஞ்சிச் செல்லங்கொடுத்து வளர்த்தார்கள். அவனைமிதமிஞ்சி நேசித்தார்கள். எனவே, அவன் விரும்பியவாறு குருமடத்திற்சேர அவர்கள் அவனைவிடவில்லை.

"இன்றுபின்னேரம் உனக்கு முசுப்பாற்றிஇல்லையோ?" என்று சற்றுக் கோபமாகக் கேட்டாள்தாய். மகன் சிரித்துக்கொண்டு: "அதற்கும்குறையா? ஒரேசந்தோஷமாகக் காலத்தைக் கழித்தேன்அம்மா" என்ருன் ஜோண்.

"அப்படியாஞல் நீ இப்போது கதைப்பதுதான் என்ன? நீயோ இளந்தை; வயதோ 17; நீ சீவிக்க இன்னும் எவ்வளவோ காலமுண்டு; வருகிறவருடம்மட்டும் பொறுத்துக்கொள்; அப்போது பார்த்துக்கொள்ளலாம்" என்று தீர்க்கமாகச்சொன்ஞள் தாய். "ஆம், அம்மா, எனக்குவயது 17 மாத்திரம் என்பதுஉண்மை; ஆனுல், நீங்கள் 17 வயதில விவாசம் செய்துகொண்டீர்களே; தேவன் இப்போது என்னை அழைக்கிருர்; அடுத்தவருடம் என்ன சம்பவிக்குமோ யார்அறிவார்?" என்று ஜோணும்திடாரிக்கமாகக் கூறிஞன்.

"அதைப்பற்றி நீ கவலைப்படாதே மகனே; அப்படிஒன்றும் உனக்குச் சம்பவிக்கமாட்டாது" என்று தாய் தேறுதல்சொன்ஞள்.

"சரி, நான் மற்றவருடம் மட்டும் காத்திருக்கிறேன்; நாளைக்குநான் குருமடத்து அதிபர் வண. பீற்றர் சுவாமியாரிடம்சென்று நான்உடனுக்குடனே குருமடத்திற்சேர முடியாதென்றும், அடுத்தவருடம் சேருவேன்என்றும் சொல்லிவிடுகிறேன்" என்ருன்ஜோண்.

ஜோண் ஒருகுருப்பிரசாதியாக வரவேண்டுமென்றும், இன்னொருகிறீஸ்துவாக ஒருநாள் திகழவேண்டுமென்றும் ஆண்டவர்விரும்பினுர். ஆனுல், கடவுள் நமக்குச் சித்தசுவாதீனத்தையும் அருளியிருக்கிருர். தம்மைப் பின்செல்லுமாறு கொடுக்கப்பட்ட அழைத்தல் மறுக்கப்பட்டதென அறிந்தும் ஜோணின்சுவாதீனத்தை அவர் எடுத்துவிடவில்லை. விட்டுவிடுகிருர். ஆனுல், இனிவரப்போவதே இக்கதையின் பரிதாபத்தைக் காட்டிகின்றது.

இதுநிகழ்ந்து சிலகாலத்தின்பின் ஒருநாள்ஜோண சென்னபட்டணத்திலிருந்து கோயம்புத்தூருக்குத் தனது காரைச் செலுத்திக்கொண்டுபோனன். போகும்போது அவனுடையகார் ஒரு லொறியோடு மோதுண்டபோது அவன் படுகாயமடைந்து, மாரணுபத்துக் குரியநிலையில் ஒருஆஸ்பத்திரிக்கு இட்டுச்செல்லப்பட்டான்.

"நல்லபிள்ளைபோல, ஆடாமல் அசையாமல் படுத்துக்கொள், ஜோண்" என்று நேர்ஸ் மிகப்பதனமாய்ச் சொன்ஞள். பிறகுஅந்தப்பையனின் பெற்ருேரைப்பார்த்தாள். அவர்களின் துக்கத்தையும், பரிதாபத்தையும் கிரகித்துக்கொண்டாள். விபத்துநடந்ததைக் கேள்விப்பட்டதும் அவர்கள் வெகுசீக்கிரம்வந்துவிட்டார்கள். நேர்ஸ் அறையைவிட்டுப் போகவே, பீற்றர் சுவாமியாரும், ஒருகுருமடத்துமாணவனும் உள்ளேசென்ருர்கள்.

"சுவாமி! யேசுக்கிறீஸ்துவைஸ்துதிக்க! ஓயாமல்தங்களையே ஜோண கூப்பிட்டுக்கொண்டிருந்தான்; ஆனபடியால் உங்களுக்குத் தெலிபோண்மூலம் செய்திஅனுப்பினேன்; ஆபத்தானநிலையில் இருக்கிருன்; விடியுமட்டும் உயிரோடு இருப்பானேஎன்பது எனக்குச் சந்தேகம், சுவாமி" என்றுதாய் சொன்ஞள்.

பீற்றர்சுவாமியார் மெல்லியசத்தமாக: "ஜோண்! உனக்காகமன்ருட இங்குவந்திருக்கிருேம்" என்ருர். ஆனுல், உண்மையில் அவருடைய செபங்கள் கவலைக்கடலில் மூழ்கியிருந்த ஜோணின்தாய்க்கே தேவைப்பட்டன என்று சொல்லலாம். சுவாமியார் தாய்க்கு ஆறுதலான வார்த்தைகள் கூறிஞர். பின்பு, "தேவன் ஜோணை அழைத்தால்,— கூப்பிட்டால், அவன் அவரிடம் போகவேண்டும்" என்ருர்.

"அதுதான்சுவாமி உண்மையான காரியம்; தேவன் ஜோணைஅழைக்கிருர்; சரியாய் ஒருவருடத்துக்குமுன் உம்மைப்போலத் தேவனின்குருப்பிரசாதியாக வாவிரும்பித் தேவனிடம் போகவிரும்பினுன்; ஆனுல், அவனைப் போகவிட நான் சம்மதிக்கவில்லை" என்று கண்களில்நீர்ததும்பக் கூறிஞள் தாய். அப்போதுஜோண் கண்களைத் திறந்துபார்த்தான். "சுவாமி" என்ருன். அதற்குமேல் எதுவுஞ்சொல்ல அவனுல்முடியவில்லை. பின்புதன் தாயைத் திரும்பிப்பார்த்து, மிக்கவில்லங்கமாக: "அம்மா! தேவன்என்னை அழைக்கிருர்; போய்வருகிறேன்" என்று சொல்லிக்கொண்டு தனது தேவன்பாதம் சேர்ந்துவிட்டான்.

ஜோணின்தலைக்குமேல் நேர்ஸ் ஓர் சீலையைவிரித்து அவன்முகத்தை மூடிஞள். தாய்அதைப் பார்த்துக்கொண்டு நின்ருள். "சுவாமி! ஜோண் தேவனிடம் போய்விட்டான்" என்றுசொல்லி விம்மிவிம்மிஅழுதாள்.

இது நடந்தது 1953-ம் ஆண்டு வைகாசிமாதம் 23-ந்திகதி சாயந்தரம்

[உண்மைச் சம்பவம்]

— K. K. J.

## சந்தாஞள் திருப்பதி — தலைவில்லு பங்குனித் திருநாள் — 1954

**முதற்பெருநாள் — 7-3-54 — அர்ச். சூசையப்பர்**
**இரண்டாம்பெருநாள் — 10-3-54 — அர்ச். யுவக்கீம்முனீந்திரன்**

4-3-54 — கொடியேற்றம். பிற்பகல் 6-30 மணிக்கு வழமையாக ஒவ்வொரு இரவும் நவநாள் தொடங்கும்.
6-3-54 — பிற்பகல் 6-30 மணிக்குப் பொண்ரிபிக்கல் வேஸ்பர்.
7-3-54 — முற்பகல் 7-30 மணிக்குப் பாடற்பூசை.
9-3-54 — பிற்பகல் 6-30 மணிக்குப் பொண்ரிபிக்கல் வேஸ்பர்.
10-3-54 — முற்பகல் 7-30 மணிக்குப் பாடற்பூசை.

வாடகைக்கு வீடுகள் உண்டு. மனவருத்தத்தைத் தடுக்கத் தயைசெய்து. நேரத்துடன் எழுதி உத்தரவு பெற்றுக்கொள்ளவும். கடை வாடகையும், வீட்டு வாடகையும் 20-2-54-க்கு முன் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

மாமிசக்கடை, காய்கறிக்கடை, குளிர்ந்தபானக்கடை ஒழிந்த ஏனைய இதர கடைகள் கோவில் பூசை, ஆசீர்வாத வேளைகளில் மூடப்படவேண்டும்.

கார்பார்க்கில் மோட்டார்வாகனங்கள் வெயிலில் மழையில் நனையாவண்ணம் மேல் மறைப்புகள் அமைக்கப்படும். வேண்டியவர்கள் தயைசெய்து 20-2-54-க்கு முன் அறிவிக்கவும்.

வண. ஆர்தர் மாட்டீன் பேர்னுண்டோ
(பரிபாலகர்)

சந்தாஞள் திருப்பதி, தலைவில்லு.



## தேம்பாவணியும் செபமாலையும்

### களிகூர்ந்தகாரணிக்கம்
### 3-ம் காரணிக்கம் — 3-ம் பிரியதத்தம்

### 23. இல்லம்தேடி அலைதல்

சூசையப்பரும், மரியம்மாளும் நன்ருக இருட்டுமுன் நகரை அடைந்துவிட வேண்டுமென்று எண்ணியவராய்ச் சற்றேவிரைவாக நடக்கிருர்கள். பெத்தலேகம் கோட்டைவாயிலைக்கடந்து நகருள்நுழைகிருர்கள். அந்நகரம் அன்று சூசையப்பருக்குப் புத்தழகுடன் தோற்றமளித்து நிற்கின்றது. எங்கேபார்த்தாலும் சனக்கூட்டமாய் இருக்கிறது. வீதிகளிலும், கடைகளைச்சூழ்ந்தும் மக்கள் கூட்டங்கூட்டமாய் நிற்கிருர்கள். அவர்கள்பேச்சிலிருந்து அவர்களும் பிறஊரிலிருந்து தம்மைப்போலக் குடிசனமதிப்பிற்காக வந்தவர்களேஎன்பதைக் கண்டறிகிருர்.

சன நெருக்கடியைக் கண்டதே சூசையப்பர் மனதில் "இன்று நாம் தங்க இடம்கிடைக்குமோ?" என்ற சந்தேகமே உண்டாகிறது. சத்திரங்களில் இடமுண்டாஎன்று பார்க்கிருர். ஆனுல், அங்கெல்லாம் மக்கள் தேங்கியிருக்கின்றனர்.

"இன்றிரவை எப்படிக்கழிப்பது? எங்கே தங்குவது?" என்று கலக்கம் கொள்ளுகிருர். பிறகு தம்துணைவியை உற்றுநோக்குகிருர். அவள்முகத்தில் ஐந்துதினங்களாகத் தொடர்ந்து செய்த பிரயாணஅலுப்பின் களைதெரிகிறது. அதனுல

"சாதியினுல் நிகர்க்கரிய மலர்மென்
தாளின் தகுதிநல்லாள்
வீதியினுல் எய்தியநோய் ஆற்ற
வெஃகி"

அதாவது—சண்பக மலரால்தானும் நிகராகாத மெல்லிய மலர்ப்பாதங்களையுடைய மகிமைவாய்ந்த உத்தமியான கன்னியானவள் வழிநடந்து அடைந்த துயரை ஆற்றவேண்டுமென ஆசித்து,

"……… ……… வெயில்மிடைந்த
ஓதியினுல் உளத்துயர்ந்தோன்
ஒதுங்கும் தன்மைத்து உறையுள்அருள்
சோதியினுல் அவிர்முகத்தில்
உறவோர்கேட்டுத் தருவினனுல்"

வெயில்மிடைந்த — தெளிந்த; ஓதியினுல் — உணர்வினுல்; — அதாவது தெளிந்தஉணர்வினுல் உளத்தில்உயர்ந்தவனுகிய சூசைமாமுனிவன் ஒதுங்கியிருக்கும்படி ஒருமனையில இடந்தேடி அருள்ஒளியால் விளங்கும்முகத்தோடு உறவின்முறையாரைக் கேட்டுத் தேடவானுயினன்.

உறவினரின் வீடுகள்தோறும் சென்று தன்னை அறிமுகம்செய்து வைக்கிருர். தங்க இடங்கேட்கிருர். அவர்களோ அவர்பேச்சுக்குச் செவிசாய்ப்போராயில்லை. வந்தவிருந்தினரோடு ஆனந்தமாகப் பொழுதுபோக்குகிருர்கள். ஆமாம், இவர்கள் தரித்திரகோலமாய்க் காட்சியளித்த சூசையப்பரைத் தங்கள் உறவினராகக் கொள்வாரா? இந்த உலகில் பிறருக்குக் கொடுக்கவென்று அருமையான பொருட்செல்வங்களை வைத்திருப்பவர்க்கே அல்லாமல், பிறர்க்குஒன்றும் கொடுக்கமுடியாமல் நீங்காத்தரித்திரம் கொண்டார்க்கு உறவினரென்பவர் உளரோ? என்று சிந்திக்கின்ருர்.

இவ்விதம் பொருட்செல்வம் இல்லாதிருந்தும் அருட்செல்வர்களான இருவரும் வீதிவீதியாக, வீடுவீடாக அலைந்துதிரிகிருர்கள். நஞ்சுமிகுந்த எட்டிக்காயை அழகுள்ளதென நினைத்து விரும்பிஉண்டவர்கள்போல, துன்பத்தைச்செய்யும் பொருட்செல்வத்தையே விரும்பிய அந்நகரமூடமக்கள் அவரை யாரோ என்று சொல்லிப் புறம்பேதள்ளுகிருர்கள்.

"பொன்னன்ன பொலிந்தநகர் புடைகள்
தோறும் புகுந்தின்ஞர்
மின்னன்ன விரைந்திரிய உருமென்(று)
அன்ஞர் விடைந்(து) உடற்றப்
பின்னன்ன முகிலுறைபெய் அன்ன
சூசை பொருதழுது
முன்அன்ன நகருதவி உணர்ந்த
பாலால் முழு(து) உளைந்தான்.

அதாவது: பொன்னைப்போலும் ஒளியாற்பொலிந்த அந்நகரின் இடங்கள் தோறும் நுழைந்து, இவர்கள் மின்னலைப்போல விரைவாகத் திரியும்போது, அந்நகரத்தார் இடிமுழக்கம்போலப் பெருங்கோபங்கொண்டு சீறித்துரத்தியதால், மின்னிஇடித்தபின்பு மேகமானது மழைபொழிவதுபோலச் சூசையப்பர் மிகவும் அழுகின்ருர். முன்பு தமது உறவினராகிய அந்நகரத்தாரின் உதவியைநம்பி அங்குவந்த தன்மையினுல் பெரிதும் வருந்துகின்ருர்.

உறவினர் தங்கள்மேல் அன்பு பாராட்டிஆதரிப்பார்களென மகிழ்ச்சியோடுவந்த சூசையப்பர் அப்போது அந்நகரமக்களின் கோபத்துக்கு ஆளாகிருர். அவர்களால் நிந்தித்து வெறுக்கப்படுகிருர். அவர் அதற்காக அவர்களைக் கோபிக்கவில்லை. தம் மனம் நொந்து……

**பண்டிதர், C. செல்வரத்தினம்**

"நான் செய்த குறைதானே
நகரே செய்த நவைதானே
தான் செய்த விதிதானே
தரணிகாக்கத் தற்பரன்ஈந்(து)
ஊன் செய்த உடலொ(டு)எழ
இடமொன்(று)இல்லை உலகிலெனுத்
தேன் செய்த பூவுயர்த்தோன்
அரற்றி விம்மித் திரிவானுல்"

அதாவது: நான்செய்த குற்றத்தினுலோ, இந்நகர்செய்தபாவத்தினுலோ, இறைவனே தான்செய்த கட்டளையினுலோ, ஆண்டவன் பூவுலகத்தை இரட்சிக்கவென்று மாமிசமாகஎடுத்த சரீரத்தோடு பிறக்க இங்கே உலகில் இடம்ஒன்று இல்லையென்று மதுவைப்பொழிந்த பூங்கொடியை ஏந்திய சூசை அழுதுவிம்மி அங்கங்கே திரிகின்ருர். என்ருலும் தம்மை இகழ்ந்தாரைத் தாம்இகழாமல் அவ்விகழ்ச்சியைப் புகழ்ச்சியாகக் கொண்டு மகிழ்ச்சியடைகிருர். ஓட்டி விரட்டுவோருக்கும் நன்மைபயக்கும் ஆசிவார்த்தைகளைச் சொல்லிச் செல்கின்ருர். தரித்திரகோலத்தால் உறவினராகக்கொள்ள வெட்கப்படுகின்ருரே; ஆதலால் உறவுமுறைபேசாது யாசகரைப்போல் இரந்துபணிந்து தயவுபெற எண்ணுகிருர்.

"மன்னுயிர்சேர் உறவெமக்குச்
சேரா என்னில் வறியரெனுத்
துன்னுயிர்சேர் இரக்கம் எமக்(கு)
இலதேன்?………"

"உறவின்முறையாராக நாம் இராதுவிட்டாலும் யாசகர்என்று வந்தவர்கள்மீதுள்ள இரக்கமாகிலும் எங்கள் மீது இல்லாமற் போனதென்ன?" என்று அவர்களைப்பார்த்து வினவுகின்ருர். அப்பொழுதும் அவர்களது கன்னெஞ்சம் இளகவில்லை.

இவ்வாறு வீதிகள்தோறும் இல்லந்தேடி அலைகையிலே சூசையப்பர் தாம்செலுத்தவேண்டிய கையிறையையும், எண்ணிக்கையையும் செலுத்திவிடுகிருர். நடுச்சாமவேளையும் கிட்டிவருகின்றது. அவர்கள் இருவரும் செய்வதறியாது நகர்வீதியிலே திகைத்து நிற்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐஞ்ஞூறு மணித்தியாலச் செபம்

தென்னமெரிக்காவைச்சேர்ந்தவரும், பெருந்தோட்டத்தலைவருமான 52வயதுடைய தொன் லூயிஸ் கபிறேரா என்பவர் தாம் செய்துகொண்ட ஓர் நேர்த்தியின்பேரிலே ரோமாபுரியிலுள்ள அர்ச். பேதுருவானவர் மகாலயத்திலும், அர்ச். மேரிமஜோர் மகாலயத்திலும் நாற்பதுநாள் (ஐஞ்ஞூறு மணித்தியாலம்) செபஞ்செய்து திரும்பியிருக்கின்றார். எக்குவடோர்நாட்டைச் சேர்ந்தவரான இவர் சென்ற வருட ஆரம்பத்திலே திடீரெனத் தமதுகண்பார்வையை இழந்துபோயினர். "பகலும் இரவுமாகப் பார்வையற்றிருந்த எனது அந்தகாரத்திலே முத். பத்தாம்பத்திநாதரைப்பார்த்து மன்றாடி, எனது கண்களின் பாவனையை நான் திரும்பவும் பெற்றுக்கொண்டால் ரோமாபுரியிலுள்ள அவரதுகல்லறை முன்பாக ஒருமாதகாலம் செபஞ்செய்வேன் என்று நேர்த்திசெய்துகொண்டேன்; அங்ஙனமாக, ஓர்இரவு கனவிலே அவரைக்கண்டேன்; மறுநாள்நான் பார்க்கக்கூடியவனானேன்" என்று அவரேகூறுகின்றார். இவர் சென்றஐப்பசிமாதம் 28-ந் திகதி ரோமாபுரிபோய்ச்சேர்ந்தார். ஒவ்வொருநாளும் அர்ச். பேதுருவானவர் மகாலயம் திறந்திருக்கிறவரையிலே முத். பத்தாம்பத்திநாதரது திருமேனிப்பேழையின் பக்கமாகச் செபஞ்செய்துவந்தார். பரிசுத்த பிதா இவரைப்பற்றிக் கேள்விப்பட்டதும் இவருக்கு ஓர் விசேஷபேட்டி அருளலாயினர். அர்ச். பேதுருவானவர் மகாலயத்திலே ஒருமாதகாலம் செலவிட்டபின் இவர் அர்ச். மேரி மஜோர் மகாலயஞ்சென்று, மரியாயின்வருட ஆரம்பவிழா வரையிலே அங்கு மேலும்பத்துத்தினங்களாகச் செபஞ்செய்தார். இவர் தமதுநாற்பது நாள் செபகாலத்திலும் 120 பூசைகள்கண்டு தினமும் திவ்வியநன்மை பெற்றிருக்கின்றார்.

## புதிய அர்ச்சியசிஷ்டர்கள்

இந்தமரியாயின் வருடத்திலே வருகிறசித்திரை, வைகாசி, ஆனிமாதங்களிலே ஏழுசுத்தவாளர்களுக்கு அர்ச்சியசிஷ்டபட்டமும், மூன்றுசுத்தவாளர்களுக்கு முத்திப்பேறுபெற்றபட்டமும் அருளுவதற்கான ஆயத்தங்கள் நடைபெறுவதாக வத்திக்கானிலிருந்து செய்திகிடைத்திருக்கிறது. அர்ச்சியசிஷ்டபட்டம அருளப்பட விருப்பவர்களிலே முத். பத்தாம் பத்திநாதர், முத். மரிய டி ரோமா தாயார், வேதசாட்சியான முத். பீற்றர் லூயிஸ் சானெல் எனும் பிரான்சியகுருவானவர், சலேசியன்சபையை அடியிட்டவரான அர்ச். ஜோண் பொஸ்கோவின் முதல்மாணவர்களில் ஒருவரான முத். தொமினிக்கோ சவியோ, முத் வின்சென் சோபலொட்டிதாயார் என்பவர்களும் அடங்குவார்கள்.

## பாப்பரசரும் வெள்ள அகதிகளும்

சமீபத்திலே ஒல்லாந்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள பாடசாலைகளுக்கான தளபாடங்கள் ஏற்றிய ஐந்துறெயில்கார்களைப் பரிசுத்த பாப்பரசர் வத்திக்கான் ஸ்ரேஷன் சென்று ஆசீர்வதித்து அனுப்பிவைக்கலாயினர். இந்தத்தளபாடங்கள் இருபதுவகுப்பறைகளுக்குப் போதியனவாகும். பாப்பரசின் கஷ்டநிவாரண உதவிக்கம்மிஷனாலே உபகரிக்கப்படலாயின. ஆவசியகம் தேவைப்படும் இத்தாலியமக்களுக்கென்று 35 லொறிகள் நிறைய ஏற்றப்பட்ட உணவுப் பொருட்களையும் பரிசுத்தபிதா ஆசீர்வதிக்கலாயினர். இன்னும் சமீபத்தில் நிகழ்ந்த பூகம்பத்தாலே பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவியாக அவர் சைப்பிறஸ் தீவின் கவர்னருக்குப் பணம் அனுப்பி வைத்திருக்கின்றார்.

## பாத்திமாவின் லூசியா

1917-ம் ஆண்டு பாத்திமாவிலே தேவதாயாரின் காட்சி பெற்ற மூன்று பிள்ளைகளிலும் இன்னமும் சீவனோடிருக்கும் சங். லூசி கன்னியாஸ்திரிகிழும் மரியாயின்வருடத்திலே ரோமாபுரிக்கு ஓர் யாத்திரை செய்யவிருக்கின்றாள். அங்கே இவள் மரியாயின்வருடம் ஆரம்பிக்கப்பட்ட அர்ச். மேரிமஜோர் மகாலயத்தைத் தரிசிப்பாள். தற்போது ஓர் கார்மேல்சபைக் கன்னியாஸ்திரியான இவளுக்குப் பரிசுத்தபிதா ஓர்விசேஷ பேட்டி அருளுவார்.

## கம்யூனிஸ்தரின்மனமாற்றம்

நாடுகடத்தப்பெற்ற கத்தோலிக்கமிஷனரிமார்சீனாவிலிருந்து நீரோட்டம்போன்று பிரித்தானிய ஹொங்கோங்தீவைநோக்கிச் சரிந்துகொண்டிருக்கையில், அங்கு சியென்சியென் நகர் மேற்றிராணியாரான யேசு சபையைச்சேர்ந்த ரிச்சாவோ ஆண்டவர் தமது மேற்றிராணித்துவ கடமைகளைச் சுதந்திரமாகநிறைவேற்றுவதற்குச் சீனக் கம்யூனிஸ்தர்களாலே அனுமதிக்கப்பெற்றிருக்கின்றார். அவர்மறைந்திருந்த இடத்தைச் சிலவாரங்களின்முன்னே கம்யூனிஸ்தர்கள் கண்டுபிடித்து, அவரது அதிகாரபூர்வமான வாசஸ்தலத்துக்கு மரியாதையாக அவரை நடத்திச்சென்றதுடன் பீக்கின் நகரைத் தரிசிக்கவும் அனுமதித்தார்கள். அந்தரங்கமாகத் திருத்தொண்டாற்றிவந்த சீன மேற்றிராசனகுருமாரும், யேசு சபைக்குருமாரும் பூரணசுதந்திரம் அருளப்பெற்றிருக்கின்றனர். இவர்கள் மறைந்திருக்குமிடம் நன்கு அறியப்பட்டதெனக் கம்யூனிஸ்தர்கள் பகிரங்கமாக அறிவித்து, அவர்கள் திரும்பிவந்து தங்கள் குருத்துவ தொண்டுகளை வெளிப்படையாக நடத்திவரலாமெனத் தெரிவித்துக்கொண்டார்கள். வேறுபன்னிருகுருமாரும் சிறைச்சாலையிலிருந்து விடுதலைசெய்யப் பெற்றிருக்கின்றார்கள்.

# முஸ்லீம் மன்னரின் செய்தி

யோர்தான் நாட்டின் முஸ்லீம் மன்னரான ஹுசெயின் அரசர் சென்ற கிறிஸ்மஸ்விழாவின்போது ஜெருசலேமிலிருந்து வானொலிமூலம் விடுத்தசெய்தியிலே தெரிவித்ததுவருமாறு: "சாந்தமும், கருணைநிறைந்தவருமான கிறீஸ்துநாதரது ஜனனஞாபகத்தைக் கோடிக்கணக்கான மக்கள் இந்தஇரவிலே கொண்டாடுகின்றார்கள். இவ்வாறாய்ச் சமாதானத்தினதும், அன்பினதும் மரணசாதனத்தை மகிமைப்படுத்துகின்றார்கள். ஏனெனில், அத்தகைய சமாதானமும், அன்பும் ஆவசியகம் வேண்டப்பெற்றிருந்த ஓர் காலத்தில் அவற்றிற்காகவே அவர்நின்றார். மனிதவர்க்கம் சகோதரத்துவத்தையும், சாந்தத்தையும் நுகர்ந்து ஆனந்திக்கத்தக்கதாக அத்தகைய ஓர் மரணசாதனத்தை மனிதசிருட்டி இன்றும்வேண்டி நிற்கின்றது. நீதியும், நம்பிக்கையும், அன்பும் ஆட்சி செய்வதாகிய அதிகஞ்சிறந்த சனசமூகத்தை ஆக்குவதிலே பல்வேறுநாடுகளின் தலைவர்களுக்கும் உதவி செய்யும்படியாய் எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன்" எனக்கூறித் தமது கிறீஸ்தவபிரசைகளுக்கு ஆனந்த விழாவையும், சுபீட்சமான வாழ்வையும் ஆசித்துச் சோபனங்கூறிநின்றார்.

## மஸ்கோவில் கிறிஸ்மஸ்பூசை

சோவியற்ருஷியாவின் தலைப்பட்டணமாகிய மஸ்கோ நகரிலே சென்றநத்தால் திருநாளன்று இருநடுச்சாமப்பூசைகள் நிறைவேறியதாக அதிகாரபூர்வமான ருஷியஸ்தாபனம் அறிவித்துள்ளது. அங்குள்ள கத்தோலிக்கரான இராசீயப்பிரதிநிதிகளுக்கும், பரிவாரங்களுக்குமாக அவர்களின் விசாரணைக்குரவரான வண. பிசோனெற்றி சுவாமியாரால் நிறைவேறிய பூசையைத்தவிர, அர்ச். லூயிஸின் ஆசனக்கோவிலிலே ருஷிய கத்தோலிக்கருக்கென வண. புட்ரோ ரேவிச் எனும் போலிஷ்குருவானவரால் மற்றோர்பூசையும் நிறைவேறியதாக அச்செய்திஸ்தாபனம் அறிவித்துள்ளது. "கடந்தசில நாட்களிலே எங்கள்கோவிலில் நடந்தேறிய ஒவ்வோர் ஆராதனையிலும் விசேஷவகையிலே ஆராதனைகாரர் ஏராளமாய்இருந்தனர்" என்று முன்சொன்ன போலிஷ் குருவானவர் கூறியதாகவும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

## செபமாலை முடிப்படையணி

அமெரிக்க ஐக்கியதேச நியூஜேர்சியைச்சேர்ந்த பசாயிக் எனுமிடத்திலே திருநாமத்தின் சபையால் ஆரம்பிக்கப்பட்ட செபமாலைமுடிச் செபப்படையணியானது தற்போது அத்தேசத்திலே 27 நாடுகளிலும், கனடாவிலும், இங்கிலாந்திலும் பரந்திருக்கின்றது. இந்தப் படையணியிற் சேர்ந்துள்ள ஒவ்வொருவரும் தினமுமே பகலில் அல்லது இரவிலே மரியாயின் வருடத்திற்கெனப் பதினைந்து நிமிஷநேரம் செபமாலைசொல்வதாக வாக்களிக்கின்றனர். இதிற்சேர்ந்துள்ள அங்கத்தவர்கள் 96 பேரைக்கொண்ட ஒவ்வோர்குழுவாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றனர். அதனால் இரவும்பகலுமாக ஒவ்வோர்நிமிஷமும் செபமாலை சொல்லப்படுகிறது.

# முத். மாட்டீனும் எலிகளும்

பிலிப்பைன்ஸ் நாட்டிலே கொராபாற்றோநகர் மேற்றிராணியாரான மொன்ஜியோ ஆண்டவர் வழமையில்இல்லாத ஓர்விஷயத்தைப்பற்றி — அதாவது எலிகளைப்பற்றி மேய்ப்பர் நிருபம்ஒன்று விடுத்திருக்கின்றார். சென்றஇருவருடங்களாக அவருடையபகுதியிலே எலிகள் கொள்ளைநோய் போன்று பரந்து வருடந்தோறும் அங்கு உற்பத்தியாகும் நெல்லிலும், பிறதானியங்களிலும் ஏறக்குறைய நூற்றுக்கு 70 விகிதத்தையும் சேதப்படுத்தியுள்ளன. அதனால் அவர் தமதுநிருபத்திலே எலிகளைக்கொன்றழிக்கும் வழிவகைகளை எடுத்துக் கூறியிருப்பதுடன் அவைகளைத் தொலைக்கும்விஷயமாய் முத். மாட்டீன் பொறெஸின் சலுகையை இரந்துகொள்ளும்படியும் கமக்காரரைத் தூண்டிவிட்டிருக்கின்றார். முத். மாட்டீனைப் பற்றிய ஓர்சம்பவம் வருமாறு: ஓர்கன்னிகாமடத்து நிலவறை ஒன்றிலே பெருக்கமுற்றுப் பெருஞ் சேதமுண்டுபண்ணிவந்த எலிகளைஒழித்துக்கட்டும் வேலைஒன்று தமக்குக் கொடுபட்டபோது, அவர்அவைகளைக் கொன்றொழிப்பதற்குப் பதில், ஓர்குன்றின்கீழுள்ள பழைய தானியக் களஞ்சியசாலையில் போய் வாழும்படிசொன்னார். அவைகளும் அவ்வாறே செய்தன. மொன்ஜியா மேற்றிராணியார் முத். மாட்டீன் பொறெஸின் 20,000 படங்களையும், தம்மால் ஆக்கப்பெற்ற செபம்ஒன்றையும் தமதுஞான மக்களிடையே பரப்பிவருகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தை மாதம்

போதுக்கருத்து :— கிறீஸ்துநாதரின் திருச்சபையிலிருந்து பிரிந்திருக்கிற சகோதரர்கள் மாசற்ற கன்னிமரியாயின் வழியாய்த் திருச்சபையில் திரும்பிவந்து சேரும்படியாக வேண்டிக்கொள்வது.

மிஷன்கருத்து :— ஆசியாவில திருச்சபை சமாதானமும், சுவாதீனமும் அனுபவிக்கும்படியாக வேண்டிக்கொள்வது.

சத்தியவேத

# பாதுகாவலன்

1954-ம் ஆண்டு

தை மாதம் 21-ந் திகதி

## ரூஷியா ஏன் மனந்திரும்பவில்லை?

— II —

"ரூஷியா மனந்திரும்பவேண்டும்; அப்போதுதான் உலகுக்குச் சமாதான முண்டாகும்" என்பது பாத்திமாநாயகி அருளிய உறுதிவாக்கு. அதனால் நாம் ரூஷியாவின் மனந்திரும்புதலுக்காகச் செபத்திலே ஐக்கியப்படவேண்டும். அதாவது ஒன்றுபட்டு ஒருமுகமாகச் செபஞ்செய்யவேண்டும். ரூஷிய மக்கள் தாங்களாகவே இதைச் செய்யமுடியாதவர்கள். அவர்களால் இதைச்செய்யவும் முடியாது. அவர்கள்பேரால் இதைச் செய்யவேண்டிய கடமை நம்மேற்சுமந்ததாகும். அவர்கள் கடவுள்பற்றைக் கைநெகிழ்ந்துவிட்டதற்காக நாம் பரிகாரஞ் செய்ய வேண்டும். ஆனால், அதையிட்டுநாம்அந்தப்பாவிமக்கள்மேல் குரோதம் பாராட்டது அனுதாபம் காண்பிக்கவேண்டும். மரியாயின் மாசற்றஇருதயத்திற்குச்செய்யும் நிந்தைப்பரிகாரமூலமாக மனந்திரும்புதற்கான வரப்பிரசாதத்தை அவர்கள்பெற்றுக் கத்தோலிக்க ஐக்கியத்திற்குத் திரும்பும்படிசெய்யவேண்டும். அதாவது மரியாயின் மாசற்றஇருதயத்திற்குச் செய்யப்படும் நிந்தைகளுக்குப் பரிகாரஞ்செய்யவேண்டும்.

நாஸ்திகரான கம்யூனிஸ்தர்களாலே அந்தமாசற்ற இருதயத்திற்கு உண்டுபணணப்படும் காயங்கள் எத்துணைபெரும் ஆழமானவைகள் என்பதைச் சரிவரக்கண்டுகொள்ளப் போகிறவர்கள்யார்? அவருடையதிருக்குமாரனை அவர்கள்புறக்கணித்துத்தள்ளிவிட்டார்கள். கடவுள் இல்லாமலே ஓர்சனசமூகத்தில் உயர்ந்தஓர்நாகரீகத்தை உண்டுபண்ண முனைந்துநிற்கின்றார்கள். "கடவுளே இல்லை; எந்த விதமுமான ஆத்மீகசீவியமுமே வேண்டியதில்லை; எல்லாம் உலகாயதமே; மனிதன் கடவுளாலே உண்டாக்கப்பட்ட ஓர் சிருட்டியல்ல; ஆனால், பலவித பொருட்களின் சேர்க்கைப்பலத்தால் உற்பவித்த ஓர்உயர்ந்த பொருளே; அவனுக்கு ஆத்துமமேஇல்லை; அது அழியாவரம் பெற்றதுமல்ல; மறுமைச்சீவியம்என்பது மனிதனுக்குக்கிடையாது; மரணத்தோடு எல்லாம் முடிந்துவிடு"மென்று கம்யூனிஸ்த பைசாசங்கள் ஆவேசங்கொண்டு போதிக்கின்றன. மனுக்குலத்தின் இரட்சணியத்திற்காகத் தம்முடைய ஆருயிரையே தியாகஞ்செய்த தமது குமாரனைப் புறக்கணித்துத் தள்ளுகிறார்களே ரூஷியமக்கள் — அதிலும் ஓர்காலம தம்மிலே மிக்கானபக்திபற்றுதல் கொண்டிருந்த ரூஷியமக்கள் — என்று சிந்திக்கும்போது மாதாவின் இருதயம எத்துணை மனோவியாகுலம் அடையுமென்று சொல்லவும்வேண்டுமா?

அதனல நமதுஐக்கியமுயற்சிகளைப் புதுப்பித்து ரூஷியாவின் மனந்திரும்புதலுக்காக மன்றாடிவரவேண்டும். பாத்திமாவிலே தேவதாயார் கேட்டுக்கொண்டவைகளைப் பிரமாணிக்கமாக அனுசரித்துவருவோமானல் ரூஷியா மனந்திரும்புவதும் நிச்சயம். உலகில் சமாதானம் உண்டாவதும் நிச்சயம். ரூஷியா மனந்திரும்புகிறவரையிலே உலகம் சமாதானத்தைக் கண்டுகொள்ளாதென்பதை நாம் ஞாபகத்திற்கொள்ளவேண்டும். முழு மனஆர்வத்தோடும், மனத்தூய்மையோடும், மனஸ்தாபம்பொருந்திய இருதயத்தோடும் மன்றாடுவோமாக! பாத்திமாவின் ஈடேற்றசெய்திகள் எங்கெங்கும், எவ்வெவரிடமும் கொண்டுபோகப்பெற்று, அதனல் மரியாயின் மாசில்லாத இருதயம் வெற்றிகொள்ளுங்காலம் தீவிரித்துவந்து, அத்தாலே சமாதானத்தின்காலம் — உலகமே கொடுக்கமுடியாத சமாதானத்தின்காலம்—உலகத்துக்கு அருளப்படும்படியாக உருக்கமாக மன்றாடுவோமாக! ரூஷியா மனந்திரும்புமானல் உலகில் கம்யூனிஸமே அழிந்தொழிந்துவிடுமென்க.

## NOTICE TO THE REVEREND FATHERS

**Independence Commemoration (Feb. 4th) in the Diocese of Jaffna**

Besides the directives from the G. A. or A. G. A., the Reverend Fathers are requested to observe the following in connection with the above Celebrations.

1. The bells are to be rung 'more festivo' at 6 a. m. on 4-2-54.
2. Special prayers are to be recited during the Mass of Our Lady, Patroness of Lanka.
3. A special Benediction service is to be held in the evening with the "Veni Creator."

The Faithful should be asked to pray for the welfare of our Country and for God's special guidance for our Leaders.

✠ **J. Emilianus Pillai, O.M.I.,**
*Bishop of Jaffna.*

19-1-54.



## சதாசகாயமாதா கோணம்

### வறுமையிலும் பெருநன்றி

அநாதைகளின் தாதாஎனப் பெயர் எடுத்தவர் அர்ச். ஜோண்பொஸ்கோ. பிச்சையெடுத்துப் பெருங்காரியங்களைச் செய்துமுடித்தவர் ஜோண்பொஸ்கோ. கிறீஸ்தவர்களின் சகாயமென்று அழைக்கப்படுகின்ற தேவதாயார் மட்டில் அவர் கொண்டிருந்த பத்தி நம்பிக்கை சாதாரணமானதல்ல. இவர் முதன்முதல் அடியிட்ட அநாதசாலை இத்தாலியில் உள்ள தூறின்நகரில் அப்பட்டணத்திலேவழமைபோலஇவர் நாள்முழுதும் யாசகம்செய்து தமது இருப்பிடம் திரும்பும்போது, சுகாதாரவசதிகள் இல்லாத ஒருகுச்சுவீட்டின் முன்புறத்தில் ஒருவறியமாது தன் கையில் ஓர் குழந்தையை ஏந்திநிற்கக் கண்டார். அந்தக் குழந்தைக்கு ஒரு வயது இருக்கலாம். கண்கள் குழிவிழுந்து, நல்லிரத்தமின்றி, மிக்க மெலிவடைந்து, எலும்புந்தோலுமாய் ஆடாமல் அசையாமல் உயிரற்ற பொருள்போல இருந்தது அக்குழந்தை. அவர் அந்தப் பெண்ணின் கிட்டச் சென்று :

"இது உன்னுடைய பிள்ளையா ?" என்றார்.

"ஆம், சுவாமி."

"எவ்வளவு காலமாக இதற்குவருத்தம் ?"

"பிறந்தநாட்டொட்டு ஒரே வருத்தந்தான்."

"வைத்தியருக்குக் காட்டவில்லையா ?"

"பாராத பரிகாரம் இல்லை. அவர்களால் ஒன்றும்செய்ய முடியவில்லை"

"இப்பிள்ளை சுகமடைய வேண்டுமென விரும்புகிறாயா ?"

"நல்லகேள்வி கேட்கிறீர்கள், சுவாமி. என் செல்வப்புத்திரன் சுகமடைய வேண்டுமென நான் எவ்வளவு ஆசிக்கிறேன் என்பதை ஆண்டவரே அறிவார்" என்று சொல்லிக் குழந்தையைக் கொஞ்சினாள்.

"இந்தக் குழந்தைக்காகத் தேவமாதாவிடம் மன்றாடினயா ?"

"ஆம். ஆனால், சுகம் கிடைக்கவில்லை."

"பாவசங்கீர்த்தனம்செய்து திவ்விய நன்மைபெற்றுக்கொள்ளுகிறதுண்டா?

"ஆம், இடைக்கிடைபெற்றுக்கொள்ளுகிறதுண்டு"

"தேவமாதா இந்தக்குழந்தைக்குச் சுகங்கொடுப்பாளென்று நம்புகிறாயா ?"

"ஆம். ஆனல், அந்த விசேஷசகாயத்தைஅடைய நான் பாத்திரவாளி அல்ல."

"சரி, அவ உனது பிள்ளைக்குச் சுகம்கொடுத்தால் என்னசெய்வாய் ?"

"எனக்குரியதென நான்வைத்திருக்கும் எல்லாச்சொத்தையும் அவவுக்குக் கொடுப்பேன்."

"கிறீஸ்தவர்களின்சகாயமான தேவமாதாவின்பேரால் உனது பிள்ளையை ஆசீர்வதிக்கவா ?"

"ஆம், சுவாமி!"

"மெத்தநல்லது. உனக்கு வசதி வாய்க்கும்போது பாவசங்கீர்த்தனம் செய்து, திவ்வியநன்மை பெற்றுக்கொள். கிறீஸ்தவர்களின் சகாயமாகிய தேவதாயாருக்கு மகிமையாக ஒன்பதுநாளைக்கு 3 பரமண்டலம், 3 பிரியதத்தம், 3 திரித்துவ தோத்திரம் சொல்லு. உனதுகணவனும் இப்படிச்செய்ய வேண்டுமென்று கேள்."

* * *

இரண்டுகிழமைகள் கழிந்தன. ஒருநாட்காலை ஜோண்பொஸ்கோவின் பங்கில்உள்ள கோவிலில்இருக்கும் சக்கிறிஸ்தறையில் ஒருமாது கையில் ஓர் குழந்தையை ஏந்திக்கொண்டு ஜோண்பொஸ்கோவைச் சந்திக்கக் காத்துக்கொண்டு நின்றாள். குழந்தை கைகாலடித்துத் துள்ளிக்குதித்துப் பூரணசுகமே உருவாகஇருந்தது. நோவனை செய்யத்தொடங்கிய மூன்றாம்நாளே பிள்ளைக்குச்சடுதியாகச் சுகம்ஏற்பட்டுவிட்டது. ஜோண்பொஸ்கோ நடந்த சம்பவத்தை மறந்துபோனார். தாயானவள் தங்களிடையே நடந்தசம்பாஷணையை நினைவூட்டி, தன் கையிலிருந்த பையைத்திறந்து அதற்குள்ளிருந்த ஒருகழுத்துச்சங்கிலி, ஒரு சோடுதோடு, ஒருமோதிரம் இவற்றை அவருக்குக்கொடுத்தாள்.

"வேறுசம்பாத்தியம் இல்லையோ?" என்று ஜோண்பொஸ்கோ கேட்டார்.

"இல்லை, சுவாமி. இவைதான் என்னிடம்உள்ளவை. நாங்கள் அன்றன்றுஉழைத்துச் சீவிக்கிறவர்கள். உழைப்பில்லாவிட்டால் பட்டினிதான்."

"அப்படியானல், என்மகளே! நீ தேவமாதாவுக்கு இவற்றைக்கொடுக்கத் தேவையேஇல்லை. இவற்றை நீயே வைத்துக்கொள்."

"நான் அவவுக்குக் கொடுத்த வாக்கை நிறைவேற்றவேண்டுமே, சுவாமி."

"உன்னுடையநன்றியே அவவுக்குப்போதும். நன்றியின் காணிக்கையாக இந்தமோதிரத்தை ஏற்றுக்கொள்ளுகிறேன். மற்றவைகளை வைத்துக்கொள்."

"ஆனல், சுவாமி........"

"உனதுபரித்தியாகமே தேவதாயாருக்குப் போதும். உனதுசங்கிலிக்கும், தோட்டுக்கும்பதிலாக நான்அவவிடம் மன்றாடுகிறேன்" என்றுசொல்லி அவர்களை ஆசீர்வதித்து அனுப்பினார்.

கிறீஸ்தவர்களின் சகாயமாகிய தேவமாதாவின்பத்தியைப் பரப்புங்கள். அப்போது புதுமைஎன்பது என்னவெனக் கண்டுகொள்வீர்கள்.

### நன்றியறிந்த தோத்திரம்

யேசுவின்திருஇருதய இரக்கத்தாலும், அர்ச். சதாசகாயமாதாவின் சகாயத்தாலும், அர்ச். அந்தோனியாரின் மன்றாட்டினாலும் எனக்குச்செய்த சத்திரவைத்தியம் யாதொரு வருத்தமும் இல்லாமல் பெரும்ஆச்சரியமான விதமாய் நன்மையாகமுடிந்தது. பதினொருநாளையில் ஆஸ்பத்திரியால் வீடுவந்துசேர்ந்தேன். இவர்கள்நாமம் புகழப்படுவதாக! நேர்த்தியின்படி இதைப்பிரசுரிக்கிறேன்.

ஜே. எஸ்.

—பிரசித்திபெற்ற நாடகதிலகமான திரு. ஹோப்அவர்களின் பாரியாரான திருமதி பொப்ஹோப் எனும்மாது இந்த மரியாயின்வருடத்திலே றோமாபுரி, லூர்துபதி, பாத்திமா முதலாம் திருசேத்திரங்களையும், கூடியமட்டிலே தேவதாயார்பேரால் அர்ப்பணஞ்செய்யப்பெற்ற ஏனைய பல ஆலயங்களையும் தரிசிக்க ஆயத்தப்படுகின்றாள்.

### அர்ச். பிரான்சீஸ்துவின் மூன்றாஞ் சபை

அர்ச். பிரான்சிஸ்குவின் மூன்றாம் சபை மாதாந்தகூட்டம் இம்மாதம் 29-ம் தேதி வெள்ளிக்கிழமை பி. ப. 5 மணியளவில் அர்ச். சூசையப்பர்சிற்றாலயத்தில் நடந்தேறும். மாசிமாதம் பரிபூரணபலன்கள் அடையக்கூடிய நாட்கள் : 1, 2, 4, 5, 14, 22, 25. பொதுப்பாவ மன்னிப்பு மாசிமாதம் 2-ம் தேதி அடையலாம்.

A. S. FRANCIS OF MARY
for Director

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெற்ருேரே! உங்கள் மகன்?



## பெற்ருேரின் பேராற்றல்

பிள்ளைகளைப் பெற்றுவளர்த்து நற்குண சீலமுள்ளவர்களாகச்செய்யும் பெருங்கடமையும், பேராற்றலும் தங்களிடத்தே உள்ளதென்பதைக் கத்தோலிக்க பெற்ருேர்பலர் உணர்வதில்லை. ஆத்துமஈடேற்றத்திற்கும், மோட்சபாக்கியத்திற்கும் உன்னத இருப்பிடமாயிருப்பது ஒருவரின்வீடுஎன்றே சொல்லலாம். சின்னஞ்சிறுபிள்ளை — கடவுளின்படைப்பு நம்மத்தியில் நன்மைதீமையென்ற வித்தியாசமின்றி எதனையும் ஏற்றுக்கொள்ளும்பக்குவத்தில் வளர்ந்துவருகின்றது. இப்பிள்ளையின்வளர்ச்சியை வளர்ந்துவரும் ஒருசிறுமரத்திற்கு ஒப்பிடலாம். கோணல்மாணலாக வளரவிடாமல் செம்மையும், அழகும் பொலிய எப்படி வளர்க்கமுடியுமோ அவ்வாறேபிள்ளையையும் அவலட்சண தோற்றமொழித்துச் சீலமும், நேர்மையும் செவ்விதாய்அமைய வளர்த்தெடுக்கலாம். உண்மையாகவே ஒரு பிள்ளையைத் தகுந்தநன்முறையிற் பயிற்றிசசீர்ப்படுத்தினல் அப்பிள்ளை மனுக்குலத்திற்கும், கடவுளுக்கும் பெருந்தொண்டு புரியும்பெரியமனிதனுக வருதல் கூடும். எனினும் தாய்தந்தையர் பிள்ளையிற்செலுத்தும் கண்காணிப்பிலேயே இது தங்கியிருக்கின்றது.

நற்குணமிக்க குருப்பிரசாதிகளையும், கன்னியாஸ்திரிகளையும், துறவிகளையும் திருச்சபை உடையதாயின் ஆண்டவருக்குத் தோத்திரம். அது இல்லறமாகிய நல்லறம்நடாத்தும் கத்தோலிக்கபெற்ருேரால் ஆயது எனலாம். நல்லகத்தோலிக்க குடும்பத்திலேயே சுகுணம் வாய்ந்த துறவுஎனும தேவ அழைத்தல் மலருகின்றது. பரிசுத்த புண்ணியசீலம்வாய்ந்த தந்தையினதும், பக்திக்கிருத்தியம்மிகுந்த கற்புடையதாயினதும் முன்மாதிரிகளினுற்தான் குருத்துவஅழைப்பு ஒருபிள்ளையின்மனதில் அரும்புகின்றது.

## பெருந்தேவை

குருப்பிரசாதிகள் இல்லாவிடின் திருச்சபை அழிந்தொழியும். விசுவாசிகளிலிருந்து தனக்குப்போதிய குருப்பிரசாதிகளைப்பெற முடியாததிருச்சபை ஒழுங்கானமுறையில், நல்லஅத்திவாரத்தில கட்டப்பட்டதுமன்று.

இலங்கையில் தேவதொண்டு புரியும் திருச்சபை உத்தமகுருப்பிரசாதிகளை வேண்டிநிற்கின்றது. சுதேசகுருமாரை வேண்டிநிற்கின்றது. இலங்கை மேற்றிராணிமாரின் ஆத்தும தாகத்தால் ஏற்பட்டமனத்தாக்கத்தைத்தீர்க்கச் செவிசாய்ககுக. அறுவடையோ அதிகம். தொண்டர்இன்றித் தவிக்கின்ருேம். இன்னும்வேறு அபிவிருத்திவேலைகளைச் செய்யமுடியாமலிருக்கிறது. போதிய குரவர்கள், கன்னியாஸ்திரிகள், துறவிகள் இலலாமையே இதற்குக் காரணமாகும். இப்போதுள்ளதேவையைப் பூர்த்திசெய்வதற்குத்தானும் எங்கள் கத்தோலிக்கசமூகம் வேண்டிய குருப்பிரசாதிகளை ஆக்கித்தருவதாயில்லை. இன்னும் பல்லாண்டுகளாக நிலைபதியானகட்டளைக்குரவரால் பராமரிக்கப்படும் பலவிசாரணைப்பங்குகள் ஒருகுருவானவரைத்தானும் ஆக்கித் தரவில்லையென்ருல் ஐயோ, எவ்வளவு துர்ப்பாக்கியம்!

## குருமாரின் குறைவானதொகை—ஏன்?

அழைத்தல்இல்லாத கத்தோலிக்கசமூகத்தில் ஏதோ எங்கேயோ தவறுஇருப்பதாக அயர்லாந்துதேசத்து அதிமேற்றிராணியாண்டவர் ஒருவர் கூறுகின்ருர். ஆத்தும ஈடேற்றத்திற்கு அத்தியாவசியமான கிறீஸ்தவ புண்ணியகிருத்தியங்களோ, தருமவழிகளோ இவைகள் அநுசரிககப்படாமை காரணமாகவிருக்கலாம். அன்றேல் குருத்துவ அழைத்தலுக்குரிய மகிமைப்பிரதாபங்களையும், ஒருகுடும்பத்தில் ஒருமகன் கிறீஸ்துநாதரின் பிரதிநிதியாக இவ்வுலகத்தில் வாழ்ந்து, ஆண்டவரின்கடமைகளை மனிதவர்க்கத்திற்காகத் தொடர்ந்துசெய்தலின் பெருமைகளையும் அறியாதிருப்பதும் காரணமாகவிருக்கலாம்.

மேர்மிலோதுஎன்ற பிரான்சிய கருதினல்ஆண்டவர்எழுதினதாவது: கிறீஸ்தவபெணமணிகளே! உங்கள் இருதயங்களில் தேவசிநேகம் கொழுந்துவிட்டெரியச் செய்யுங்கள். அப்போதுதான். அந்த நேசச் சுவாலைகளில் ஒருகுருத்துவஇருதயம் தோன்றுதல கூடும. "எங்கள்ஆண்டவரே! எங்களுக்கு நற்புத்திரரைத்தாரும்; உலகமக்களை ஈடேற்றவும, பலிபீடத்தில்நின்று உமமைச் சேவிக்கவும், சர்வேசுரனைப் பற்றி அப்போஸ்தலராகநின்று உச்சரிக்கவும் எங்கள்புத்திரரைப் பரித்தியாகம்பண்ண எங்களைத் தூண்டியருளும்" என்று பிரார்த்தியுங்கள். இதுவல்லவோ நீங்கள்பெறக்கூடிய பெரும் பாக்கியம். சிந்தித்துப்பாருங்கள்.

## ஒரு பெரும்பேறு

எனது ஒருமகன் ஆண்டவரின்சேவைக்காகத் தெரிந்தெடுக்கப் பெற்றிருக்கின்ருனே என்று எண்ணும்போது நாம் எவ்வளவுபெருமிதம் கொள்ள வேண்டும். இச்சலாக்கியம் எல்லாருக்கும்கிடைக்குமா? குருப்பட்டம்பெற்ற மகன்—இதுவல்லவோ நாம் ஆண்டவருக்குக் கையளிக்கும்பெருங்காணிக்கை, திருச்சபையைச்சங்கிக்கும் உத்தமகிருத்தியம், ஆத்துமாக்களின் சகாயம். சர்வேசுரன் உங்களுக்குஅளித்த பெருங்கொடையாகிய உங்கள்புத்திரரைப் பாத்திரமாக்கும் வாழ்க்கைப்பெருநெறி இதுவன்ருே!

தமதுமக்கள் வாழ்க்கையில் பெரும்புகழ்பெறும் உத்தியோகங்களை வகிப்பதையே அநேக பெற்ருேர் விரும்புகின்றனர். ஆனல், உத்தியோகங்கள்யாவற்றிலும் மேன்மையானது குருத்துவம்என்பதைக் கத்தோலிக்க பெற்ருேர் அறிந்தாலோ! குருவானவர் உண்மையிலே அழியாதஆன்மாவின் வைத்தியராகவிருக்கின்ருர். அவரே தேவனின்முன் மக்களின் மத்தியஸ்தராய்இருந்து தேவனின்சமாதானத்தையும், ஆசீர்வாதங்களையும் அவர்களுக்குப் பெற்றுக்கொடுக்கின்ருர்.

# தஞ்சத் தாய்

1

கருப்பெனவே வளர்த்தெடுத்த கடவுள் மைந்தன்
காணுமற் கைதவறிப் போன போது
நெருப்பிடையே நடப்பவள்போல் நேச னேடே
நெட்டுயிர்த்து வந்தவழி நீளந் தேடித்
திருப்பதியிற் திரும்பவவர் இருக்கக் கண்டு
தேறிமனங் களிகூர்ந்த தேவ தாயை
விருப்பகலா உளத்தோடு வேண்டி வாழ்வார்
வெல்வதற்கே அரிதான தொல்லை யுண்டோ?

2

அருமையிலும் அருமையுடன் அமலனை
அரவணைத்த திருக்கரங்கொண் டவனியோரைப்
பெருமையிலும் சிறுமையிலும் பேதமின்றிப்
பிரியமுடன் அரவணைத்துப் பேணிநாளும்
அருமறையாம் திருமறையின் அன்னையாகி
அகிலமெலாம் ஆண்டுவரும் அன்புத்தாயை
இருமையிலும் பிரியாத உரிமைபூண்டோர்
ஏங்கவரும் தாங்கரிய தீங்குமுண்டோ?

3

பெண்ணினத்திற் குயர்வளிக்கும் பெண்ணய்வந்தாள்
பேறடைய ஈசனையே பெற்றுத்தந்தாள்
மண்ணகத்தோர்க் கபயமருள் மாதாய்வந்தாள்
மாட்சிமைசேர் மன்னனுக்காய் மண்ணில்வாழ்ந்தாள்
விண்ணகத்தே உடலுயிரோ டேறிப்போந்தாள்
வெய்யோனின் ஒளியெடுத்தோர் ஆடைகொண்டாள்
தண்ணளியோன் பதந்தோயத் தானேநின்ருள்
தஞ்சமதை நம்பினவர்க் கஞ்சல்உண்டோ!

4

கோனேறும் குலவுதிருக் கரத்தினைக்
குன்ருத மன்னர்வழிக் குலத்தினை
மீனேறும் மகுடமணிச் சிரத்தினை
மிககான துயர்போக்கும் பலத்தினை
வானேறும் வழிக்கருளும் வரத்தினை
வலிமாய வலகைமிதி பதத்தினைத்
தேனேறுங் கமலமலர் முகத்தினைத்
தேடினவர் அஞ்சவொரு கேடுமுண்டோ.

'யுவன்' — காம்பொன்

# ஸ்ரீ கே. பிலிப்பையா அவர்களின் தேகவியோகம்

நமதுஅச்சகத்திலே கடந்த ஐந்து வருடகாலமாகத் தலைமை லிகிதராகக் கடமையாற்றி வந்தவரும், அனுபவ ஞானம், நேர்மை, அனுதாபம், இன்சொல், அமைதியானபோக்கு உடையவருமான ஸ்ரீ கே. பிலிப்பையா அவர்கள் கடந்த ஓர்மாதமளவாகச் சுகத்தாழ்வுற்றிருந்து, மானிப்பாய், மூளாய் ஆஸ்பத்திரிகளிலும், யாழ்ப்பாண அரசினர்ஆஸ்பத்திரியிலும சிறந்த டக்றர்மாரால தகுந்தவைத்திய சிகிச்சை செய்யப்பெற்றும் குணமுருது சென்ற சனிக்கிழமை பிற்பகல் இரண்டுமணியளவில் காலஞ்சென்ற துயரசெய்தியானது எவர்க்குமே பெருங்கவலையைத் தருவதாயிற்று. மரிக்கும்போது இவருக்குவயது 67. இவர் சம்பத்திரிசியார் கல்லூரியிலே கல்விபயின்று அரசாங்க கிளேறிக்கல் பரீட்சையில் அரங்கேறிப் பலவிடங்களிலும் பெருந்தகைமையுடன் உத்தியோக பதவிகள் வகித்திருந்து இற்றைக்கு ஐந்துவருடங்களின்முன் இளைப்பாறியிருந்தார். தாம் உண்டு, தமதுகடமை உண்டு, தமதுகுடும்பம் உண்டுஎன்று கருத்தாகத் தமதுகடமைகளை இவர்எப்போதும் கவனித்து அமைதியாக ஒழுகிவந்து பல்லோரினதும் நன்மதிப்பைப் பெற்றிருந்தார். இவர் தும்பளையிலே றெஜிஸ்ருராய்விளங்கியிருந்த ஸ்ரீ எஸ். கபித்தாம்பிள்ளை அவர்களின் கனிஷ்ட புதல்வர். இவருக்கு ஆறுபுதல்வரும், மூன்றுபுதல்விகளும், அநேக பேரப்பிள்ளைகளும் உள்ளனர். மறுநாள் உருமத்தின்போது இவரின் பிரேதசேமமானது, யாழ்ப்பாணப் பட்டணத்திலும், மற்றுமிடங்களிலுமிருந்து திரளான இனசனர், சிநேகிதர் வந்துகூடிய சமூகத்திலே வண. ஏ. சியோர்ப்காசுவாமியார் துக்கசங்கீதம் பாடிக் கடைசிஆசீர்வாதம் கூறிநிற்கப் புலோலி, அர்ச். சூசையப்பரின் சேமக்காலையிலே அதிசிறப்பாக நடந்தேறியது. இவரை இழந்து துன்புறும்பாரியார், புத்திரர், புத்திரிகள், மருகர்கள், பேரப்பிள்ளைகள் முதலானேருடன் நாமும் அனுதாபப் படுகின்ருேம்.

R. I. P.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலர் பக்கம்



## அண்ணா சொல்வது:

அருமைச் சகோதரங்களே!

உங்கள் "பக்க"த்தை அழகுபடுத்தும் படத்தைப் பார்த்தீர்களா? அது உங்கள் மனதில் உண்டு பண்ணும் சிந்தனைகள் என்ன? இந்தப் படத்தில் தெரிகிறவர்களில் உங்களைப் போன்ற தம்பி, தங்கைச்சி உண்டா? முழுப்படத்திலும் செறிந்து இருக்கும் கருத்து என்ன? என்று ஆராய்வாய் எழுதி எனக்கு அனுப்புங்கள். திறமானவைகளை இப்பக்கத்தில் பிரசுரஞ் செய்வேன்.

அது இருக்க, உங்களுக்கு யாரேனும் ஒருவர் குத்துவார்த்தை சொன்னால், என்ன நடக்கிறது? உடனே உங்களுக்குக் கோபம் வருகிறது. அவன் ஏன் அப்படிச் சொன்னான் என்று யோசிக்கும்போது ஒருகாரணமும் காண முடியாது; நீங்கள் ஒரு குற்றமும் செய்யாதிருக்க, அவன் அப்படிச் செய்தானே என்று யோசித்து மனவருத்தம் அடைகிறீர்கள்.

ஆயின் சற்றே யோசித்துப் பாருங்கள். அவ்வார்த்தை உங்களுக்கு வருத்தத்தை உண்டாக்கச் சொன்னது என்பது நிசமா? நன்மைக்கென்றும் சொல்லி யிருக்கலாமே.

ஆகையால், உங்கள் மனப்புண்ணுக்கு அன்பான மன்னிப்பு என்ற மருந்து போட்டு அதை மாற்றி விடுங்கள். அதைப் பற்றி இனிமேல் நினைக்கவே வேண்டாம்.

நடந்த குற்றத்தைப் பற்றி யோசிப்பதிலும் பார்க்க, அதை மன்னித்து, மறந்து விடுவது உசிதம். மன்னிப்பேன்; ஆனால், மறக்கமாட்டேன் என்று சொல்லுவது "மன்னிக்க மாட்டேன்" என்பதற்குச் சரி. வணக்கம்.

உங்கள் அன்புள்ள, அண்ணா.

## றோசாவே!

(1) வன்ன வன்ன றோசாவே!
வாசம் வீசும் றோசாவே!
சின்னஞ் சிறிய பாலன்போல்
சிரிப்பெங் கேநீ கற்றாயோ?

(2) கனியும் அன்பின் உருவோநீ
கண்கள் கவரும் றோசாவே!
இனிமைத் தமிழின் சுவையூறும்
இதழ்கள் எங்கே பெற்றாயோ?

(3) தென்றல் உந்தன் புகழ்பாடும்
தேன்வண் டுந்தான் இசைபாடும்
என்றன் மனமுங் கவிபாடும்
எழில்எங் கேநீ பெற்றாயோ?

(4) உள்ளம் கொள்ளும் தியரூடே
உவகை யூட்டும் வகைதானோ
முள்ளின் இடையே றோசாவே!
முழுமதி போல்நீ வந்தாயோ?

(5) வாழ்வும் சிறிதே பொழுதானால்
வாடும் முன்னே றோசாவே!
தாழ்வில் லாதே பயன்எல்லாம்
தருமுன் தருமங் கண்டேனே.

"ஜெயம்"

## சரிதானா?

1
பல்லிச் சப்தம் கேட்டவுடன்
பட்டது காரியம் கெட்டதெனச்
சொல்லிச் சித்தம் குலைவாரின்
சோதிடம் எல்லாம் சரிதானா?

2
கத்தன் தந்த நாள்ஏழில்
கழிவும் திறமும் உணடென்றே
நித்த நிமித்தம் பார்ப்போர்கள்
நினைப்பது எல்லாம் சரிதானா?

3
போகப் பயணம் புறப்பட்டார்
பொல்லாப் பொருள்கள் முன்னிற்க;
யோகம் கெட்டே போச்சென்பார்
யோசனை எல்லாம் சரிதானா?

4
வாய்வும் பித்தும் தலைக்கேறி
வாயாற் பிதற்றும் நோயினரைப்
பேய்தான் என்று பார்ப்போரின்
பேதமை எல்லாம் சரிதானா?

5
இவ்வா றெங்கள் மத்தியிலே
இன்னும் கொஞ்சம் இருக்கின்ற
ஒவ்வாப் பிழைகள் களையாமல்
ஒதுங்கி இருத்தல் சரிதானா?

(யுவன்)

## அடம்பன் கிராமம்

மாதோட்டம் தனது பழைய சிறப்பை அடையத் தொடங்கும காலம் இது. அதனால் இங்குள்ள பல கிராமங்களைப் பற்றி இடையிடையே சில குறிப்புகள் பாலர் பக்கத்தில் வெளிவருவது நலமாகும் என நினைத்துஇம்முறை அடம்பனைப்பற்றி எழுதுகிறேன்.

இது மாந்தையின் வடபகுதியில் உள்ள ஓர்பிரதான மத்திய கிராமம். இது மன்னார்ப் பட்டினத்தில் இருந்து எட்டாவது மைலிலே — அங்கிருந்து மாந்தை வழியாக மடுப்பதிக்குச் செல்லும் தெருவில் இருக்கிறது. இன்னும் உயிலங்குளத்தில் இருந்து வடதிசையாகச் சென்று விடத்தல்தீவு வீதியைச் சந்திக்கும் ஓர்தெருவும் இதனூடாகச் செல்லுகிறது. இங்கே அடம்பு மரங்களும், அடம்புக் கொடிகளும் அடர்த்தியாகச் செறிந்து இருப்பதால் இதற்கு அடம்பன் என்னும் காரணப்பெயர் வரலாயிற்று. இங்கே வசிப்பாருள் புராதன குடிபதிகளாக உள்ளார் அனைவரும் கத்தோலிக்கரே. இடையிட்டுக் குடியேறிய முஸ்லீம்களும், இந்துக்களும் இங்குவசிக்கின்றனர். அர்ச். வியாகுலமாதா போரல் பழமைவாய்ந்த அழகிய சிற்றாலயம் ஒன்றும், சிறந்த கத்தோலிக்க பாடசாலை ஒன்றும் இங்கு உள்ளன. இந்த ஆலயமே இப்பகுதித்தலைமைக் கோயிலாகும். இங்கே ஓர்குரவர் நிரந்தரமாக இருந்து வருகிறார். அவர் வசிக்கப் பெரிய குருமனை ஒன்றும் இருக்கிறது. இன்னும் வருடந் தோறும் வியாகுல மாதாவின் திருநாளும் நத்தால், பாஸ்குப் பண்டிகைகளும் பயபக்தியாக அதிலே சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. மாதோட்ட வைத்தியசாலை என அறியப்படும் பெரிய ஆஸ்பத்திரியும், (ஏ)பிரிவிலுள்ள ஓர்உபதபால் கந்தோரும், மாந்தைப் பகுதிக் காரியாதிகாரி கந்தோரும், வாசஸ்தலமும், கமக்காரர் ஐக்கிய சங்க தாபனமும், மாந்தை வடக்குப் பகுதிக் கிராமச்சங்க கட்டிடமும், நீர்ப்பாசனபகுதிக் காரியாலயமும் சிறியகடைவீதியும், இங்கே இருந்துவருகின்றன. விடத்தற்தீவு நீத்தா பஸ்கம் பெனிப் பஸ்சேவை மன்னார்ப்பட்டினத்துக்கும் இதற்கும்இடையில் நடைபெற்று மக்களுக்குப்போதிய பிரயாணவசதி அளிக்கிறது. இங்குள்ளாரின் விசேஷ தொழில் கமமுயற்சியே. ஆதலால் வருடம் இருமுறை வேளாண்மை செய்யப் படுகிறது. குளமும், கிணறுகளும் இருப்பதால் இந்தக்கிராமம் நீர்வளம் உள்ளது. இதனை அடுத்த பற்றைக் காடுகளில் ஏராளமான பாலைமரங்கள் இருப்பதால் காலந்தோறும் அடம்பன் கிராமவாசிகளும், அயற்கிராம வாசிகளும் கூட்டம் கூட்டமாகச்சென்று பாலைப்பழங்கள் பறிக்கும் காட்சி மாட்சியாய் இருக்கும்

— எஸ். ஏ.

## யார் சொல்லுங்கள்?

1
என்றும் உன்னைப் பிரியாமல்
இருப்பான் ஒருவன் அறிவாயோ?
நின்றால் அவனும் நிற்பானே!
நிமிர்ந்தால் அவனும் நிமிர்வானே!
சென்றால் அவனும் உன்னுடனே
சேர்ந்து எங்கும் வருவானே!

2
குதித்தால் அவனும் குதிப்பானே!
குனிந்தால் அவனும் குனிவானே!
துதித்தால் அவனும் துதிப்பானே!
துணிந்து எங்கும் வருவானே!

3
எதையோ செய்ய நீ நினைத்தால்
அவனும் உணர்ந்து கொள்வானே!
அதனை நீயும் செய்வாயேல்
அவனும் உடனே செய்வானே!
காலை மாலை வளர்ந்திடுவான்
கடும்பகல் தன்னில் குறைந்திடுவான்

4
சூரிய ஒளியில் துலங்கிடுவான்
சோலை இருளில் மறைந்திடுவான்
சுவரிலும் கூடத் தோன்றிடுவான்
சுத்தக் கறுப்பாம் அவன்நிறமும்.

'நிழல்' — எஸ். பி. எஸ்.

## பாடசாலைப் பிள்ளைகளுக்கு

"ஓர் கஷ்டமான வேலை" எனும் தலையங்கத்துடன் எழுதப்பட்ட ஓர் சம்பவத்தை நீங்கள் சென்றவாரப் பத்திரிகையில் படித்திருப்பீர்கள். பீற்றர் என்பவன் வருடக் கணக்காகத் தேவனைத் தேடாமல் கைவிட்டு இருந்ததினால், தேவனும் தன்னைநினைக்க மாட்டார் என்றும், அவர் தன்னைக் கைவிட்டு விடுவாரென்றும் அவநம்பிக்கைப் பட்டுக் கொண்டு இருந்தான். ஆனால், அவன் மனந் திரும்பியே மரித்தான். இதற்குக் காரணம், பாடசாலைச் சிறுபிள்ளைகளின் செபமும், அவர்கள் செய்த சிறு ஒறுத்தல் முயற்சிகளுமே. ஆதலால் நீங்களும் உங்கள் செபத்தினாலும், ஒறுத்தலினாலும் பாவிகள் நரகத்துக்குப் போகாமல் தடுத்து, அவர்களை மனந்திரும்பச் செய்யலாம். ஒவ்வொரு நாளும் பாவிகளுக்காக ஒருசிறு செபமாவது சொல்ல வேண்டும். நாம் சர்வேசுரனின் உதவியோடு ஆத்துமங்களை இரட்சித்தால், அது அதிகமாய் வேறு நல்ல ஆத்துமங்கள் செய்யும் செபத்தின் பலனாற்தான் சித்தியாகிறது என்பதை நினைக்க வேண்டும். பாவிகளுக்காகச் செபிக்கவும், சிறு பரித்தியாகம் செய்யவும் மறந்து விடாதீர்கள்.

— M. J M.

## தேவ அழைத்தல்
## திரிதினத்துக்குப்பின்

ஞானேந்திரனும், அமிர்தநாதனும் ஆத்தும குருவிடம் சென்று தேவ அழைத்தலைப் பற்றியும், அதற்குரிய பக்குவங்களைத் தங்களில் உண்டாக்குவதைப்பற்றியும் அடிக்கடி சம்பாஷித்து வருகிறார்கள்.

* * *

பாக்கிய ரத்தினமும், ஆரோபணமும் தங்கள் வகுப்பிலிருந்து இருவராவது இவ்வருடம் சந்நியாச பதவியைத் தேடவேண்டும் என்று செபமாலை சொல்லிவருகிறார்கள்.

* * *

றோஸ்மலரும், காணிக்கையும் தங்கள்சேனைக்கு உதவி அங்கத்தினரைச் சேர்க்கும் பொருட்டு அநேக சிறுவரைச் சந்தித்து மரியாயின் சேனையைப் பற்றிக் கதைத்து வருகிறார்கள்.

* * *

மேரியோசேப்பும், இம்மனுவேலும் இலங்கையில் எத்தனைவிதமான சந்நியாச கூட்டங்கள் இருக்கின்றன என்றும், அவைகளின் விசேஷ ஊழியம் என்ன என்றும் ஆராய்ந்து வருகிறார்கள்.

நீங்கள் என்ன செய்கிறீர்கள்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலர்பக்கத் தொடர்ச்சி

## பிரத்தியட்சத்தின்பின் 8-ம் ஞாயிறு

## பேர்வீரனின் விசுவாசம்

ஒருநாள் ஒரு குஷ்டரோகி யேசுவிடம் வந்தான். "ஆண்டவரே, நீர் விரும்பினுல் என்னைக் குணமாக்க உம்மால் கூடும்" என்று கெஞ்சினுன். யேசுநாதர் அவனைக் கண்டு மனம் வருந்தினுர். "உனக்கு ஒத்தாசை செய்கிறேன். குஷ்டரோகம் நீங்கிக் குணம் அடைவாயாக" என்ருர். உடனே அவனுடைய வருத்தம் மாறிவிட்டது.

பின்பு சேனைத் தலைவன் ஒருவன் யேசுவிடம் வந்து: "ஆண்டவரே, என்னுடைய வேலைகாரன் சுகமில்லாமல் கிடக்கிருன்" என்ருன். "நான் வந்து அவனைச் சொஸ்தப் படுத்துகிறேன்" என்று யேசுநாதர் மறுமொழி சொன்னுர்.

"ஆண்டவரே, நீர் என்வீட்டிற்கு வர நான் அபாத்திரவான். நீர் சொன்னுல் என்வேலைகாரன் சுகமடைவான்" என்ருன் சேனுதிபதி.

யேசுநாதர் சொல்லியபடி வேலைகாரன் சுகம் அடைந்தான்.

குஷ்ட ரோகியையும், சேனுபதியையும் போல நாமும் யேசுவில் விசுவாசம் உள்ளவர்களாக வேண்டும். அப்பொழுது எங்கள் செபத்துக்குச் செவிசாய்த்து, எங்களுக்கு வேண்டியதை அவர் தருவார்.

(அடுத்த ஞாயிற்றுக்கிழமைச் சுவிசேஷத்தைக் கவனியுங்கள்.)

— எம். ஜெயம்

## உதிர்ந்த மலர்கள்

### சிறுவன்செய்த நேர்த்தி

கர்த்தர்பிறந்த திருநாளுக்குச் சில நாட்களின்பின் சிக்காகோநகர தெருவழியாய் ஆறுவயதுச் சிறுவன்ஒருவன் தனக்கு வெகுமதியாகக்கிடைத்த புதுக் கைவண்டியை உருட்டிக்கொண்டு சென்ருன். வண்டியைக்கண்ட அவனுடையதாய் திடுக்கிட்டாள். அவன் ஒருநாள் அடுத்த கோவிலில் இருந்த யேசுபாலனின் சுரூபத்தைக் குடிலிலிருந்து எடுத்து, தனது வண்டியில் வைத்திருந்தான். தாய் ஓடிச்சென்று தன்மகனைக் கடிந்துகொண்டாள். "அம்மா, எனக்கு ஒருபுதுவண்டி கிடைத்தால், சின்ன யேசுவையே அதில் முதலில் ஏற்றிச்செல்வதாக நேர்த்தி செய்திருந்தேன்" என்று சிறுவன் கூறினுன்.

* * *

### ஏன் மறைந்துவிட்டன?

அர்ச். ஏபிரேமின் மாணவர்களில் ஒருவன் ஜூலியன். அவன் நல்லவன். ஆதலின் அவன்மேல் ஏபிரேமுக்கு அன்புஅதிகம். ஆனுல், அவன் செயல்களில் ஒரேயொருகாரியம் அவருக்குப் பிடிக்கவில்லை. ஜூலியன் தனதுபுத்தகங்களைப் பாதுகாப்பதில்லை. புத்தகத்தின் அநேகஇடங்களிலே வார்த்தைகள் அப்படியே அழிந்துபோயிருக்கும். சிலவார்த்தைகளை யாரோ சாப்பிட்டுவிட்டதுபோலத் தோன்றும். ஒருநாள் ஏபிரேம சிறுவனின்புத்தகத்தை எடுத்துப்பார்த்தார். எங்கெந்தப்பக்கங்களில் யேசு என்னும்பேர் எழுதப்பட்டிருந்ததோ அந்தஇடங்களி லெல்லாம் வார்த்தைகள் மறைந்துவிட்டன என்பதைக் கவனித்து, "ஜூலியன், யேசு என்னும் திருநாமம் எழுதப்பட்ட இடங்களெல்லாம் தேய்ந்திருக்கக் காரணமென்ன?" என்ருர். அதற்கு அவன்: "என்நேசதந்தாய், என்இரட்சகராகிய யேசுவை என்முழு இருதயத்தோடும் நான்நேசிக்கிறேன்; அவருடைய திருநாமத்தை என்புத்தகத்தில் பார்க்கும்பொழுதெல்லாம் பெரிய பாவியான மரிபமதலேனம்மாள் யேசுவின்பாதங்களை முத்தமிட்டதையும், அவளுடைய பாவங்களெல்லாம் மன்னிக்கப்பட்டதையும் நினைக்கிறேன்; நான்யேசுவைப் பார்ப்பதில்லை. ஆனுல், அவள் செய்ததைப்போல் அவருடைய பாதங்களை முத்திசெய்யவும் என்னுல் முடியாது; ஆனுல், அவருடைய ஆசீர்வதிக்கப்பட்ட நாமத்தை என்புத்தகத்தில் அடிக்கடி பார்க்கிறேன். அது எழுதப்பட்டிருக்கும் இடத்தைத் திரும்பத்திரும்ப முத்திசெய்கிறேன்; நான் என்முழு இருதயத்துடன் அவரை நேசிப்பதாகவும், மோட்சத்தில் நான் அவரைப் பார்க்கும்நாளை நான் காத்திருப்பதாகவும் சொல்லி என்பாவங்களை மன்னிக்கும்படி அவரைக் கெஞ்சி மன்றுடுகிறேன்" எனச் சிறுவன் பதிலளித்தான். "தம்பி, இரக்கமுள்ள கடவுள் உன் விண்ணப்பத்துக்குச் செவிசாய்ப்பார்" என்று ஏபிரேம்மொழிந்தார்.

* * *

### அவள்செய்த முறையீடுஎன்ன?

மெர்மிலோட் என்னும் குருவானவரிடம் ஒருபக்தியுள்ளபெண் பாவசங்கீர்த்தனம செய்துவந்தாள். அவள் பிறர்சிநேகக் கிரிகைகள்பல செய்துவந்தவள். அவள் வியாதியாய்விழுந்து பாயும் படுக்கையுமாய்க் கிடப்பதைக் கேள்விப்பட்ட சுவாமியார் அவளைப் பார்க்கசென்ருர். "சுவாமி, நான் நல்லசுகத்துடன் இருந்தால் எவ்வளவோநன்மை செய்திருப்பேனே" என்று அவள்முறையிட்டாள். "நீ சுகத்துடனிருந்து செய்த நன்மையைவிட வியாதியாய் இருந்து அதிகநன்மை செய்யலாம்; நமது ஆண்டவர் மூன்றுவருடம் வேதம்போதித்து ஒருசில யூதர்களையே மனந்திருப்பினுர்; மூன்றுமணிநேரம் சிலுவையில் தொங்கி உலகத்தையே மனந்திருப்பினுர் என்பதை மறவாதே" என்று சுவாமியார் மொழிந்தார்.

* * *

### விளக்குமாற்றின் பயன்யாது?

லூர்துசெபியில் தேவஅன்னையைக் காணும் பாக்கியம்பெற்ற பெர்னதெத் அம்மாள் ஒருசாதாரண கன்னியாஸ்திரியாக மறைந்தவாழ்க்கை நடத்துவதைக்கண்டு ஓர்கன்னியாஸ்திரி ஆச்சரியப்படுவதைப் பார்த்த பெர்னதெத் அம்மாள்: "விளக்குமாற்றைக் கொண்டு நாம்என்ன செய்கிறோம்?" எனக் கேட்டாள்.

"இடத்தைச் சுத்தம்செய்கிறோம்."

"சுத்தம்செய்து முடிந்ததும் என்ன செய்கிறோம்?"

"அதை அதன் இடத்தில் வைக்கிறோம்."

"அதன் இடம் எங்கே இருக்கிறது?"

"கதவுக்குப்பின்னுல் இருக்கும் மூலையில் இருக்கிறது."

"அதேபோல் தேவதாய் என்னைப் பயன்படுத்தினுள்; பின்னர்என்னை ஒருமூலையில் வைத்திருக்கிருள்; அதுவே எனக்குரியஇடம்; அந்த இடத்தில நான் மகிழ்ச்சியுடனிருக்கிறேன்" என்று பெர்னதெத் மொழிந்தாள்.

* * *

### என்னை அறியமாட்டாயா?

கன்ரர்பறி அதிமேற்றிராணியாரான அர்ச். எட்மண்ட் சிறுவனுய்இருக்கையில் ஒருநாள் சிலநண்பர்களோடு உலாவச்சென்ருர். அப்போது சிலசிறுவர் கடவுளின் பெயரை மரியாதையின்றி உச்சரிப்பதைக் கேட்ட அவர் விசனித்து அவர்களை விட்டுப்பிரிந்து வீட்டுக்குத்திரும்பினுர். திரும்பும்போது வழியிலே சின்னயேசு அவருக்குத் தோன்றி, அன்புடன்வந்தனம்கூறினுர். யேசுவை இன்னுரென எட்மண்ட் கண்டுபிடிக்கவில்லை. "எட்மண்ட், என்னை நீ அறியமாட்டாயா?" என்று யேசுகேட்க: "தெரியாது, இதற்குமுன் நான்உன்னைப் பார்த்ததில்லையே" என எட்மண்ட் சொன்னுர். "எப்பொழுதும் நான்உன்னருகில் இருக்கிறேன்; வீட்டிலும், பாடசாலையிலும், நீ போகுமிடமெல்லாம் நான் உன்னுடன் இருக்கிறேன்; என்நெற்றியில் எழுதியிருப்பதைப் பார்" என்று யேசு கூறியதும் எட்மண்ட் ஏறெடுத்துப் பார்த்தார். "நசரேனுகியயேசு யூதர்களின் அரசர்" என எழுதியிருந்தது. "இதுவே என்பெயர்" என யேசு உரைத்ததும் எட்மண்ட்அச்சத்தினுல் கீழேவிழுந்தார். யேசு அவரைஎழுப்பி, "எட்மண்ட், தொடர்ந்து என்நாமத்தை வந்தித்துவா; உன்இருதயத்தில் அது எழுதப்பட்டிருக்கக் கடவது; அப்படியானுல் நான் எப்பொழுதும் உன்னுடன் இருப்பேன்" என்று சொல்லிமறைந்தார்.

## புதியவருடத்தின் மூன்ருவதுநாளில்




**முதலாம்படத்தைப் பாருங்கள்:**

புதுவருடம் பிறந்து விட்டால் தாத்தாவுக்கு ஒரே புளுகந்தான். ஆடுவார். பாடுவார். ஆனந்தங் கொண்டாடுவார். தான் ஓர் மதுவிலக்கு அபிமானி என்றதையும் மறந்து விடுவார். வருடப் பிறப்புச் சந்தோஷங் கொண்டாட வருவார், போவாராலே ஐந்தாறு நாளைக்குத் தாத்தாவின் இல்லம் ஒரே பரிமளிப்பாக இருக்கும். அவ்வாருக, அன்று வருடம் பிறந்து மூன்ரும்நாள் ஆக்கும். தனது பழைய நண்பர்களைச் சந்தித்துச் சோபனங் கூறிவரவென்று முதன்முதலாக வீட்டைவிட்டுப் புறப்பட்டார் தாத்தா. புத்தப் புதிதாக வாங்கிய காற்சட்டை, சப்பாத்து, மேற்சட்டை, கழுத்துப்பட்டி எல்லாம் ஒன்ரென்ருய்ப் பக்குவமாக எடுத்து மாட்டினுர். பிறகு பெருநாளுக்கென்று சாய்ப்பெல்லாம தேடிப்பார்த்துப் புதுமாதிரியாய் வாங்கிய அந்த அழகான தொப்பியையும் எடுத்துத் தலையில் கவிழ்த்தார். கடைசியாக ஆமான சுருட்டாய் ஒன்றைத் தேடிஎடுத்துப் பற்றவைத்துக் கொண்டு நிலைக்கண்ணுடிமுன் நின்று பார்த்தார். அவரை அறியாமலே அவருக்குப் பெரிய உற்சாகம் பிறந்தது. அம்மட்டா! முகத்திலும் ஓர்இளமை வாடை வீசியது. உள்ளதைச் சொன்னுல் என்ன. ஓர் புது மாப்பிள்ளை போலக் காட்சி அளித்தார். எல்லாத்திலும் பார்க்க அந்தப் புதிய தொப்பிதான் தாத்தாவுக்கு ஓர் தனிஅழகைக் கொடுத்தது. அவருக்கு உண்டான சந்தோஷமோ இம்மட்டு அம்மட்டன்று. கடைசியாகத் தனது நடைகோலுடன் வெளிகொண்டு வீதிவழியே என்றுமில்லாத காம்பீரத்துடன் நிமிர்ந்தநிலையிலே நடந்து செல்லுகின்ருர். அப்போது அவருடைய கருத்து முழுவதும் அந்தத் தொப்பியில்தான். எதிர்முகமாக வருவார் எல்லாம் அதைக் கவனித்துச் செல்வதைக் கடைக்கண் எறிந்து பார்த்துக் கொண்டு, இதுபோலும் ஒன்று கிடைக்க ஆரும் தவந்தான் கிடக்கவேண்டுமென்று அதையிட்டுப் பெருமைப் பட்டுக் கொண்டு நடந்து செல்லுகிருர்.

**இரண்டாம்படத்தைப் பாருங்கள்:**

அப்போது தாத்தா எதிர்பாராத விதமாகக் கனவான் ஒருவர் சுங்கானும் வாயுமாய் அவர்முன்னே எதிர்கொண்டு வந்து விரைவாக அவரைக் கடந்து செல்லுகின்ருர். உடனே அவர் தனது தொப்பியைக் கழற்றி ஓர் பார்வை பார்த்துவிட்டு, அதனைக் கையில் வைத்துக் கொண்டே நின்ற நிலையில் முகத்தைத் திருப்பி ஓரேபார்வையாய் அந்தக் கனவானை—இல்லை, இல்லை அவருடைய தொப்பியைக் கவனமாகப் பார்க்கின்ருர். இப்படியே அவர் மாறிமாறி இரண்டு தொப்பிகளையும் பலமுறை பார்த்து விட்டார். ஏன்?

**மூன்ரும்படத்தைப் பாருங்கள்:**

தாத்தாவுக்கு மனம் பொறுக்கவில்லை. இந்த விலைகொடுத்து நான் வாங்கிய இந்தத் தொப்பியைப் போல இன்னும் ஒருவர் தரித்துப் போகவோ? அப்படியானுல் இந்தத் தொப்பிக்கு மானம் என்ன? மதிப்பு என்ன? இதனைச் சுழற்றி அப்பால் வீசிவிட்டாலும் பாதகம் இராது என்று அதை இரண்டு கையாலும் ஏந்திக்கொண்டு ஆழநீளமாக யோசிக்கின்ருர் பாருங்கள். சரி, தாத்தா அந்தத் தொப்பியைத் திரும்பவும் தலையில் கவிழ்ப்பாரா? அல்லது அப்பால் வீசிவிட்டுத்தான் போவாரா? சொல்லுங்கள்.

**நாலாம்படத்தைப் பாருங்கள்:**

பாருங்கள் தாத்தாவின் தொப்பி எங்கே கிடக்கிறது? என்று. தலையிலா? தரையிலா? மதிப்பு இல்லாத இந்தத் தொப்பியோ வேண்டாம் அப்பா, வேண்டாம் என்று அப்பால் வீசிவிட்டுப் பின்னுலே திரும்பித் தானும் அதைப் பார்ப்பதில்லை என்ற சபதத்துடன் செல்லுகின்ருர். ஆனுல், அதை எறிந்தபோது "தொலைந்து போ" என்று அவர் உரமாகச் சொன்ன சப்தங்கேட்டுத் திடுக்கிட்டு அந்தக் கனவான் திரும்பிப் பார்க்கின்ருர். தாத்தா மிகுந்த கோபத்துடன் தொப்பியை எறிந்துவிட்டு அப்பாலே நடந்து செல்வதைக் கவனிக்கிருர். எப்படி இருக்கிறது? தாத்தாவின் வருடப் பிறப்புச் சந்திப்பு!

— 'வேந்து'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுதேச வர்த்தமானம்

### கண்டித் தேர்தல்மனு

சென்றபொதுத்தேர்தலிலே பாராளுமன்ற சனப்பிரதிநிதிகள் சபைக்குக் கண்டிநகர்ப் பிரதிநிதியாகத் தெரியப் பெற்றவரான திரு. ஈ. எல். சேனுநாயக அவர்களின் தேர்தல் முறைகேடானதென்று சுப்பிறீங்கோட்டிலே தீர்ப்பளிக்கப்பட்டது. அதனுல்அவர் இந்தத் தீர்ப்பைத் தள்ளிவைக்குமாறு ஓர் அப்பீல்மனு சமர்ப்பித்தார். மூன்றுநீதியரசர்கள் விசாரணைசெய்து இந்தஅப்பீல்மனுவைத் தள்ளிவிடலாயினர். தற்போது திரு. ஈ. எல் சேனுநாயக அவர்கள் பிறிவிகவுண்சிலுக்கு அப்பீல்செய்ய ஆயத்தப்படுகின்றுர்.

### நிறுத்தப்படும் றெயின்கள்

இம்மாதம் 25-ந்திகதி திங்கட்கிழமை முதல் முப்பதுக்குமேற்பட்ட றெயின்களின் போக்குவரத்தை நிறுத்திவிடுமாறு றெயில்வேஅதிகாரிகள் தீர்மானித்திருக்கிறுர்கள். இவைகளில் பெருந்தொகையாகக் கரையோரப் பாதைகளில்ஓடும் பதின்மூன்றுறெயின்கள் நிறுத்தப்படும். ஏனையவைகள் பெரியபாதையிலும், வடபாதையிலும், களனிவெலிப்பாதையிலுமாகும். இந்த நடவடிக்கை எடுக்கப்படக்காரணம், றெயில்வேக்கு மேலும் ஏற்படக்கூடிய அதிகநட்டத்தைக் குறைப்பதேயாகும். அன்றுமுதல் ஓடும் றெயின்களின் நேரஅட்டவணையிலும் மாற்றங்கள் செய்யப்படும்.

### றெயில்வேப் பிரயாணிகள் சங்கம்

யாழ்ப்பாணக் குடாநாட்டு றெயில்வேப்பிரயாணிகள் சங்கத்தின் பொதுக்கூட்டம் ஒன்று யாழ்ப்பாண மத்திய கல்லூரியில் நடைபெற்று, அதிலே சங்கத்தின்பெயர் "வடபாக றெயில்வேப் பிரயாணிகள் சங்க"மென மாற்றப்பட் டிருக்கிறது. றெயின்சலாரை முன்னிருந்த அளவுக்குக் குறைக்க வேண்டுமெனப் போக்குவரத்து மந்திரியாரைக்கேட்பதென்றும், றெயில்வேப் புதியநேர அட்டவணையால் பொதுசனங்களுக்கும், விசேஷமாகப் பாடசாலைப்பிள்ளைகளுக்கும் அதிகம்வசதிக் குறைவு ஏற்பட்டிருப்பதாலே பளையிலிருந்து காலை 7-15 மணிக்கும், காங்கேசன்துறையிலிருந்து காலை 7-45 மணிக்கும் புறப்பட்டுக் காலை 8-30 மணிக்குப் பிந்தாமல் யாழ்ப்பாணம வந்து சேரும்படியாக, காலை 8-45 மணிக்குத் தங்கள்பாடசாலைகளைப் போய்ச்சேரவேண்டிய பாடசாலைப் பிள்ளைகளின் நன்மையைக் கோரி ஒழுங்குசெய்யப்பட வேண்டுமென றெயில்வேமனேஜரைக் கேட்பதென்றும் இருபிரேரணைகள் கூட்டத்தில் அரங்கேற்றப்பட்டன. றெயில்வே அதிகாரிகள் றெயிற்சலாரைஏற்றியமையானது எதிர்பார்த்தபடி றெயில்வே வருமானத்தில் யாதோர் ஏற்றத்தையும் கொண்டுவரவில்லை; றெயின்கள் மூலம் பிரயாணஞ்செய்வார் தொகை குறைந்திருக்கக் காணப்படுகிறது; சலார்ஏற்றத்தாலே, வறியவர்களுக்குக் கஷ்டமும், பொதுசனங்களுக்கு றெயின்பிரயாணத்தில் மனமடிவுமே ஏற்பட்டுள்ளனஎன்றும் அவ்வேளை எடுத்துக்காட்டப்பட்டது.

### மரங்கள்நாட்டும் இயக்கம்

இலங்கைமுழுவதிலும் பழமரங்கள் நாட்டும் இயக்கம்ஒன்றைத் தொடக்கி நடத்துவதைத் திட்டஞ்செய்வதற்கென்று கமத்தொழில்—உணவு மந்திரியார் அதிகாரபூர்வமான ஓர்கம்மிற்றியை அமைத்திருக்கின்றுர். இதிலே கமத்தொழிற்தலைவர், உணவுஉற்பத்தித் தலைவர், கிராமாபிவிர்த்தித் தலைவர் ஆகியோர் அடங்கியிருப்பர். இக்கம்மிற்றி இலங்கையின் பல்வேறுபகுதிகளுக்கும் ஏற்றபழமரங்களைக்கண்டறிந்து, அவைகளை நாட்டும்இயக்கத்தை நடத்திவைப்பதற்குரிய ஓர்விபரமான திட்டத்தைத் தயாரித்துச் சிலவாரங்களில் சமர்ப்பிக்கவிருக்கிறது.


## பள்ளிக்கூடப் புஸ்தகங்கள்

இலங்கைப் பாடசாலைகளின் உபயோகத்திற்காக விசேஷமுறையில் எழுதப்பட்டது.

### ஞானுபதேசம்

| | | ரூ. | சத. |
|---|---|---|---|
| சின்னக் குறிப்பிடம் | ... | | 20 |
| பெரிய குறிப்பிடம் | ... | | 30 |

### கத்தோலிக்க வாசகம்

| | | | |
|---|---|---|---|
| கீழ்ப் பிரிவு | ... | | 50 |
| மேற் பிரிவு | ... | | 50 |
| இரண்டாம் புத்தகம் | ... | | 60 |
| மூன்றும் புத்தகம் | ... | | 70 |
| நாலாம் புத்தகம் | ... | | 80 |
| ஐந்தாம் புத்தகம் | ... | | 90 |

### நவமணி வாசகம்

| | | | |
|---|---|---|---|
| கீழ்ப் பிரிவு | ... | | 50 |
| மேற் பிரிவு | ... | | 50 |
| இரண்டாம் வகுப்பு | ... | | 60 |
| மூன்றும் வகுப்பு | ... | | 70 |
| நாலாம் வகுப்பு | ... | | 80 |
| ஐந்தாம் வகுப்பு | ... | | 90 |
| ஆறும் வகுப்பு | ... | | 90 |
| ஏழாம் வகுப்பு | ... | 1 | 00 |

### கணிதம் (S. A. Edward)
**Revised by J. V. Gunaratnam, B.A.**

| | | | |
|---|---|---|---|
| இரண்டாம் வகுப்பு | ... | 1 | 25 |
| மூன்றும் வகுப்பு | ... | 1 | 50 |
| நாலாம் வகுப்பு | ... | 1 | 75 |
| ஐந்தாம் வகுப்பு | ... | 1 | 90 |
| ஆறும் வகுப்பு | ... | 2 | 00 |
| ஏழாம் வகுப்பு | ... | 2 | 00 |

### மனக்கணிதம்

| | | | |
|---|---|---|---|
| இரண்டாம் வகுப்பு | ... | | 50 |
| மூன்றும் வகுப்பு | ... | | 60 |
| நாலாம் வகுப்பு | ... | | 70 |
| ஐந்தாம் வகுப்பு | ... | | 80 |

### தமிழ்உறுப்புக் கோப்பிகள்

2-ம், 3-ம், 4-ம், 5-ம் வகுப்பிற்கு 30

### சுவைதரும் தமிழ்

(இரத்தினம்செல்லையா, M.A., M. Litt.)

| | | | |
|---|---|---|---|
| முதலாம் பாகம் | ... | 1 | 00 |
| இரண்டாம் பாகம் | ... | 1 | 00 |

* * *

## மத்திய வகுப்புகளுக்காக

புதிதாக விசேஷமுறையில் எழுதப்பட்ட

## கணிதங்கள்

### எண் கணிதம்

| | | ரூ. | சத. |
|---|---|---|---|
| ஆறும் வகுப்பு | ... | 2 | 00 |
| ஏழாம் வகுப்பு | ... | 2 | 00 |

### வீச கணிதம்

| | | | |
|---|---|---|---|
| முதலாம் பாகம் | ... | 2 | 00 |
| இரண்டாம் பாகம் | | 2 | 00 |

### கேத்திர கணிதம்

| | | | |
|---|---|---|---|
| முதலாம் பாகம் | ... | 2 | 00 |
| இரண்டாம் பாகம் | ... | 2 | 75 |

*Distributors :*

St. Joseph's Catholic Press,
JAFFNA.

* * *

## விளம்பர விகிதம்

| | | ரூ. | ச. |
|---|---|---|---|
| நன்றியறிந்தஸ்தோத்திரம் | ... | 2 | 00 |
| மரணஞாபகம் ஒரு அங். | ... | 2 | 00 |
| ஓடர் நிசி ( Order Nisi ) இரண்டுமுறைக்கு | ... | 10 | 00 |

முற்பணம் கட்டவேண்டும்

மற்றும் விளம்பரங்களுக்குக் கடிதமூலமாகவோ, அன்றேல் நேரிலோ மனுப்பண்ணிக்கொள்ளவும்.

மனேஜர்,
சத்தியவேத பாதுகாவலன்.



## இன்ஷூரன்ஸ் ஆசாமிகள் இல்லாது போயிருந்தால்

வெகு சொற்பமானவர்களே ஆயுள் அஷ்யூரன்ஸ் பொலிஸிதாரராக இருக்கக்கூடும். ஆயிரக்கணக்கான விதவைகளும், அநாதைக் குழந்தைகளும் நிர்க்கதியாகப் பரிதவிக்கக்கூடிய நிலைமையிலிருப்பர். உங்கள் குடும்பத்திற்கு உடனடியாகப் பாதுகாப்புத் தேடிக் கொள்வதற்கு ஆயுள் அஷ்யூரன்ஸே நிச்சயமான வழியாகவிருப்பினும், ஆயுள் பொலிஸிகளைப் பெற்றுக்கொள்வதற்கு இன்ஸ்யூரன்ஸ் கந்தோர்கள் முன்புக்கு நீண்ட வரிசைகளில் ஜனங்கள் நின்றுகொண்டிருக்கவில்லை. காரணம் ஆயுள் அஷ்யூரன்ஸ் வாங்கப்படுவதல்ல, ஆனுல் விற்கப்படுவதே.

இது எளிதில் ஊகிக்கக்கூடியது. ஏனெனில், ஒவ்வொரு மனிதனும் பூரண ஆயுள் காலம் ஜீவிக்க முடியுமென்றே எதிர்பார்க்கிறுன். எதிர்காலத்தில் அளவில்லாத நம்பிக்கையுள்ளவனுகப் பிற்காலத்திற்கெனப் பாதுகாப்புத் தேடுவதை ஒத்தி போடுகிறுன். ஏதாவது அபாயம் நேருவதானுல், தனக்கல்ல, அயலான் ஒருவனுக்கே அவ்வாறு நேருமென நினைக்கிறுன். எனினும், நாம் நினைப்பதுபோல் நன்மையே எப்பொழுதும் நேருவதில்லை. எனவே ஒரு மனிதன், மனைவி, குழந்தைகளின் நலனைப் பொறுத்த மட்டில் இன்ஸ்யூரன்ஸ் ஏஜெண்டுகள் இருப்பது பெரிய அதிர்ஷ்டம். இந்த ஏஜெண்டுகள் ஒருவரின் விருப்பையோ, வெறுப்பையோ பொருட்படுத்தாது உதவிபுரியும் உண்மைநண்பர்களாக விளங்குகின்றனர்.

## சிலோன் இன்ஷூரன்ஸ்
### கம்பெனி லிமிட்டெட்,

தலைமை ஆபீஸ் :

**69, இராணி வீதி — கொழும்பு.**

**Ceylon Iusurance Co. Ltd., 69, Queen St., Colombo**


### பிரியாவிடை வைபவம்

பேசாலையைச்சேர்ந்த துள்ளுக்குட்டிக் குடியிருப்புக் கத்தோலிக்கபாடசாலைத் தலைமைஆசிரியை செல்வி எல். சூசையம்மாவுக்குச் சென்ற15-1-54-இல் இவ்வூர்ப் பெற்றுர்-ஆசிரியர் சங்கத்தால் ஓர் பிரிவுஉபசாரவிழா நடத்தப்பட்டது. அன்றுபிற்பகல் பாடசாலை மண்டபத்தில் இவ்வூர்மக்கள் குழுமியிருக்க, ஆசிரியைஅவர்கள் மாலையிட்டு வரவேற்கப்பெற்றதும் பிள்ளைகளால் வரவேற்புக்கீதம பாடப்பட்டது. பின்னர் பாடசாலைப் புதியஆசிரியர் திரு. பி. இராயப்புஅவர்கள் கிராம மக்கள்சார்பாக ஆசிரியை இப்பாடசாலையின் வளர்ச்சிக்கும், பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்குமாகச் செய்துள்ள பணிகளைப்பாராட்டி நன்றிதெரிவித்தனர். ஈற்றில் ஆசிரியைஎழுந்து பாடசாலையைநடத்த ஊரவர்கள் தனக்கு அளித்த ஒத்துழைப்புக்கும், பிரிவுஉபசாரத்துக்கும், அன்பளிப்புக்குமாக நன்றி தெரிவித்ததுடன் வைபவம் இனிதேநிறைவாயிற்று.

—மாணவன்

— இங்கிலாந்திலே கெயின்ஸ்பரோவின் ஏள் பிரபுவுடைய சகோதரரான கௌரவ ஜெருட் நொயெல்அவர்கள் ரோமாபுரியிலே குருப்பட்டத்துக்கான வேதசாஸ்திரங்கள் படிக்கத்தொடங்கியிருக்கின்றுர்.

### பிரிவுஉபசார விழா

யாழ்ப்பாணம், சென்சாள்ஸ் சாதனைகழகத்திலே ஆசிரியத்தொண்டாற்றிச் சமீபத்தில் வேறுபாடசாலைகளுக்கு மாற்றப்பட்டுச்சென்ற ஆசிரியர்கள் எல். கிறேஷியன், எவ். மரியநாயகம், திருமதி ஏ. தம்பித்துரைஎனும் மூவருக்கும்சென்ற 13-1-54புதன்கிழமை அக்கழக ஆசிரியர்கள், மாணவர்களாலே ஒருபிரிவுஉபசாரம் நிகழ்த்தப்பட்டது. அன்று நணபகலின்போது ஆசிரியர்கள் மூவரும் கழகத்திற்கு அழைக்கப்பெற்றுவந்து மேற்றாமாணவர்கள் பயிலும்சாலையிலே பிரத்தியேகஆசனங்களில் அமர்ந்ததும் ஜே. எஸ். சி. வகுப்புமாணவர்செல்வன் எஸ். டானியல் என்பவர் பிரியாவிடைநாயகர்கள் தங்கள்சுகநலன்களைப்பாராது மாணவர்களின் கல்வி, ஒழுக்கவளர்ச்சிக்காக ஆற்றியதொண்டிற்காக நன்றியுரைகூறினர். பின்னர்ஆசிரியர்கள் நடத்திய விருந்தின்போது தலைமையாசிரியரும், ஆசிரியர்கள் சிசிலியா பாக்கியநாதர், எஸ். கே. பீற்றர், எஸ். மரியாம்பிள்ளை, ரி. எம். அம்புறோஸ் என்பவர்களும் பிரியாவிடைநாயகர்களின் உயர்ந்த பண்பினையும், செயற்திறனையும் பாராட்டிப்பேசியபின் ஆசிரியர்கள்சார்பாக அவர்களுக்கு அன்பளிப்புகள் வழங்கப்பட்டன. ஈற்றில், ஆசிரியசங்க காரியதரிசி எம். ஆர். அந்தோனிப்பிள்ளை அவர்களின் நன்றியுரையுடன் வைபவம் இனிதேநிறைந்தது. — நிருபர்

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, January 21-1954

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org